SWATHANTRA SANGU

Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

வெள்ளையரின் ஸலாம்—படம்.

'போடா மனிசப் பதரே!'—கதை

வழக்க நோய்—தி. ஜ. ர.

"தேங்காய் அழுகிவிடும்"

ஸ்திரீ-புருஷ தர்மம்
—ராஜாஜி.

அட மழையே!
—சிட்டி.

பசி!

புத்தகம் 4. பங்குனி மீ 3உ (16-3-34) வெள்ளி இதழ் 16.

Rambles in Vedanta

BY

B. R. RAJAM AIYAR

THE variety of the *pabulum* presented in this volume will be found pleasant and delicious both by the young and the advanced. While every morsel it contains is nutritious and easy of assimilation, not a few delicacies will be discovered which are exquisitely spiced and flavoured with stories and illustrations from the Puranas. The aim which runs through all—from the short fancy of Suka's advent to the long life-tale of Vasudeva—is the realisation of the Self, the knowledge of the Atman the elaboration and impression of the sublime truth taught by all religions, by the Vedas and the Puranas by the hoary sages of antiquity, by the Lord Sri Krishna, and reiterated by the Lord Jesus Christ in those hallowed words which will live for ever —" What shall it profit a man, if he shall gain the whole world and lose his own soul ?"

RS. 5

Swathantra Sangu Book Depot

Triplicane :: Madras.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நெ. 8088 ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மண்யன்.

Vol. IV.] பங்குனிமீ 3உ வெள்ளிக்கிழமை (16—3—1934) [No. 16

'நகல்' அடிக்கின்றார்கள்

'நல்லது' என்ற பெயர் எதற்காவது வந்துவிட்டால் உடனே அதை நகலெடுத்து விடுவது பிரிட்டிஷாரின் சாமர்த்தியம். நகல்கள் ஏற்பட ஏற்பட முதல் சிருஷ்டிக்குப் பெருமை அதிகமாகும். நகல் எப்போதும் நகல்தான். உலகத்தில் முதன்முதலில் பிரும்மாண்டமாகப் பொருளாதாரத் திட்டமொன்றை வகுத்து அதை அமுலில் கொண்டுவந்து நாட்டிலுள்ள அத்தனை தோள்களும் கைகளும் உழைக்குமாறு செய்த பெருமை ஸோவியத் ருஷியாவைச் சேர்ந்தது. அந்தத் திட்டத்தில் ருஷியா பிரமாதமாக முன்னேறியதைக் கண்டவுடன் மேனாடுகளுக்கும் ஞானோதயமாயிற்று. அமெரிக்காவிலும் என். ஆர். ஏ. திட்டம் தோன்றிற்று. அதே மாதிரி ஐரோப்பாவின் நாடுகளிலும் திட்டங்கள் தோன்றின. இந்தமாதிரி பிளான் வேலையில் உலகுக்கு ஆசையூட்டியது முதல் முதல் ருஷியா வென்பதையும் இதர தேசங்களின் போக்கு நகலெடுத்தலுக்குச் சமமென்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

ஆச்சரியம்! இந்தியாவுக்கும் பொருளாதாரப்பிளான் ஒன்று வகுக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை டெல்லிச் சட்டசபையில் ஒருவர் நுழைத்தார். அவ்வாறு திட்டம் போடுவதில் அனைவருக்கும் திருப்தியேயாயினும் அது உற்பத்தியான ஸ்தானம் யாருக்கும் பிடித்ததாயில்லை. ஐரோப்பியப் பிரதிநிதியான எப். இ. ஜேம்ஸ் அத்தகைய திட்டத்தைக் கொண்டு வந்தது கண்டு அதனிடம் சந்தேகம் ஏற்பட இடமுண்டாயிற்று. இந்தியாவுக்கு இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் நஷ்டத்திற்கு மூலகாரணம் அந்நிய வர்த்தகமாகும்.

அந்நிய வர்த்தகத்துக்கு ஆதரவு தருபவர்கள் இந்தியாவிலுள்ள ஐரோப்பிய கனவான்கள். அவர்களில் ஒருவர் 'இந்தியப் பொருளாதாரப் பிளான்' ஒன்றைக் கொண்டு வந்தால் அந்தச் சுண்ணாம்பில் சூட்சுமம் ஏதேனு முண்டோ என்று சிலர் சமுசயிப்பது சகஜம் தானே. நிற்க,

இந்தியாவின் தற்கால வாழ்வுக்கு ஏற்றபடி உண்மையான பொருளாதாரத் திட்டம் ஒன்று போடுவதென்றால் அதற்கு ஏராளமான முன்னணி வேலைகள் செய்யவேண்டும். விதைக் கோட்டையில் பெருச்சாளியை வைத்துக் கட்டிக் கொண்டதுபோல அந்நியச் சாமான் இறக்குமதியையும் ஆதரித்துக் கொண்டு சுதேசித் திட்டம் போடுவதெப்படி? இந்தத் தேசத்தின் ஜீவா

வெள்ளையரின் ஸலாம்!

—*Courtesy*: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

இந்தியாவின் தங்கம் பெட்டி பெட்டியாக வெளி நாட்டுக்குப் போய்க்கொண்டிருப்பதை நிறுத்துவாரைக் காணோம். ஆனால் இந்தச் சமயத்தில் இந்தியக் குடியானவனிடம் பிரமாத பக்தி ஏற்பட்டு எப். இ. ஜேம்ஸ் பொருளாதாரத் திட்ட மொன்றைச் சட்டசபையில் கொண்டு வருகின்றார். வெள்ளையர்கள் தன்னைப் பார்த்துத் திடீரென்று ஸலாம் போடுவது கண்டு குடியானவன் ஆச்சரியப் படுகிறான்.

தாரமான, விவசாயம் தவித்துக்கொண்டிருக்கிறது; படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டமோ பலமாயிருக்கிறது. சில முதலாளிகளும், பெரிய பெரிய சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்களுமே வர வரக் கொழுத்துக் கொண்டு வருகின்றனர்; இவ்வளவுக்கு மேல் எவனுக்கும் சம்பளமோ சம்பாத்தியமோ இருக்கக்கூடாது என்று கண்டிப்பான ஏற்பாடு இல்லாததால் ஏழைகள் வயிற்றிலடித்து வாரிக் கட்டுகின்றவர்களே அட்டகாசம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த மூலாதாரமான விஷயங்களைப் பற்றி யாதும் முடிவு செய்யாமல் பொருளாதாரத் திட்டம் வகுப்ப தெப்படி?

இந்தியாவின் ஆட்சி இந்தியர்கள் கைக்குள் வந்தால்தான் அரசியலையும் பொருளாதார வாழ்வையும் ஒருங்கு சேர்த்து ஒரு திட்டம் வகுத்து உருப்படியாக வேலை செய்யமுடியும். பட்டினியால் கஷ்டப்படுகிறவர் கூட்டம் ஒரு பக்கம், வயிறு புடைக்கத் தின்றுவிட்டு அஜீர்ணத்தால் வருந்துபவர் கூட்டம் இன்னொரு பக்கம் என்ற வித்தியாச அலங்கோலங்களை மறைத்தாலன்றி, எந்தப் பொருளாதாரத் திட்டமும் நாட்டில் நடைபெற முடியாது என்பது திண்ணம்.

வரவேற்பு—வழியனுப்புவேலை

சென்னைக் கார்ப்போரேஷன் சபையில் இந்த வருஷத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் ஒரே ஒரு தீர்மானம் மிகவும் குறிப்பிடத்தக்கது.

“வைஸ்ராய் போன்ற பெரிய உத்தியோகஸ்தர்களுக்கும், பெரிய தேச பக்தர்களுக்கும் சபை வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுக்கலாமே யன்றி கண்டாக் கண்ட மனிதர்களுக்கெல்லாம் படித்துக் கொடுக்கலாகாது” என்பதே அந்தத் தீர்மானம். கார்ப்போரேஷன் சபை ஊருடைய சுகாதாரத்தைக் கவனிப்பதற்கும், ஜனங்களின் க்ஷேமத்தைக் கவனிப்பதற்குமாக இருக்கிறதேயொழிய, “வாங்கோ ஐயா! போங்கோ ஸாமி!” என்று ஸதா வரவேற்புப் பத்திரங்களும் வழியனுப்பு உபசாரங்களும் படிப்பதற்காக இல்லை. இந்தத் தீர்மானம் தனிக் கமிட்டிக்குச் சென்று திரும்பியவுடன் ஏகமனதாக நிறைவேற்றப்படுவது நல்லது.

சுறுசுறுப்பு உண்டாக்க விளம்பரம்

ருஷியாவில் ஜனங்கள் சுறுசுறுப்போடு வாழவேண்டு மென்பதற்காக, சுவரொட்டி விளம்பரங்கள் போடப்பட் டிருக்கின்றன. நத்தையைப்போல நகரப் போகின்றீர்களா அல்லது ஆகாய விமானப்போலப் பறக்கப் போகின்றீர்களா வென்று கேட்கிறது ஒரு விளம்பரம். பூச்சி வாழ்வுக்கும், விமான வாழ்வுக்கு மிடையே தேசத்தில் பல படிகளிருக்கின்றன வென்பதைப் படம் காட்டுகின்றது.

தேச மக்களை சுறுசுறுப்பாக்குவதற்காக மேற்படி விளம்பரம் ருஷியாவில் பல விடங்களில் ஒட்டப்பட்டுள்ளதாம்.

திமிரா? பயமா?

எல்வின் பாதிரியார் இதுவரை செய்துள்ள ‘குற்றம்’ ஒன்றே ஒன்றுதான். அதாவது அவர் மகாத்மா காந்தியடிகளிடம் அத்தியந்த பக்தி யுடையவர். அந்தக் ‘குற்ற’த்துக்காக எல்வின் பாதிரியார்மீது அதிகாரிகள் தங்கள் கடைக்கண்ணைக் காட்டியிருக்கின்றார்கள். சில மாதங்களாக எல்வின் பாதிரியார் மத்திய மாகாணக் காடுகளில் அரிய தேச சேவை செய்து வருகின்றார். அந்த மாகாணத்தின் காடுகளில் எழுத்து வாசனை யில்லாத ஏழை மக்கள் பல்லாயிரம் பேர் வசிக்கின்றனர். அந்த ஏழைகளை மிரட்டி வேலை வாங்குவது அங்குள்ள ‘நாகரிக’ ஜாதியினர் தலைமுறை தலைமுறையாகச் செய்து வரும் ஓர் சூழ்ச்சி. “செம்புக்கும் கொம்புக்கும் அஞ்சி மாந்தர் சிற்றடிமைப்படலாமோ?” என்ற பிரசாரத்தைத் தீவிரமாக எல்வின் பாதிரியார் அந்தப் பிரதேசங்களில் செய்ய ஆரம்பித்தாராம். ‘கோண்ட் சேவா மண்டலம்’ என்ற சங்கத்தை ஸ்தாபித்து அநேக பள்ளிக்கூடங்களையும் ஆங்காங்கு ஏற்படுத்தினாராம். அந்த ஏழை ஜாதிக்கு எழுத்து வாசனை ஏற்படுவது அந்தப் பிரதேசங்களிலுள்ள சர்க்கார் சில்லரைத் தெய்வங்களுக்கும் முதலாளிகளுக்கும் பிடித்திராது போலும். சேவா மண்டலத் தொண்டரொருவரைச் சமீப காலத்தில் ஒரு சில்லரைக் கான்ஸ்டபிள் துன்புறுத்தினானும். சேவா மண்டலப் பள்ளிக்கூடங்களுக்குக் குழந்தைகளை அனுப்பலாகாதென்று கிராமத்துக்குக் கிராமம் மறைமுகப் பிரசாரமும் நடந்து வருகிறதாம். சில நாட்களுக்கு முன்னே ஓரிடத்தில் ஒரு பள்ளிக்கூடத்தைத் திறந்து வைக்க எல்வின் பாதிரியார் புறப்பட்டுக்கொண் டிருந்தார். அப்போது காட்டிலாகா அதிகாரியிடமிருந்து ஓர் கடிதம் வந்தது. “காடுகள் சர்க்காருடையவை. அதிகாரிகள் உத்தரவின்றி யாரும் அந்தக் காடுகளில் நுழையக்கூடாது” என்பது அந்தக் கடிதத்தின் சுருக்கம். எல்வின் பாதிரியார் செய்துவரும் அரிய சேவைக்கு இடைஞ்சல்கள் செய்வதில் அதிகாரவர்க்கத்துக்கு என்ன லாபம்? ஏதோ ஓர்வகைப் பயத்தினால் எல்வினுக்கு இடைஞ்சல்கள் செய்கின்றார்களா? அல்லது அதிகாரத் திமிரைக் காட்டுவதற்கு விரும்புகின்றார்களா?

தீர்மானம் மிதிக்கப்படுமா?

விவசாயிகளுக்குத் தரப்பட்டிருக்கும் வரி வஜாப் போதவே போதாதென்று சென்னைச் சர்க்கார் காது கேட்கப் பல தடவை கூக்குரல் போட்டார்கள். சட்ட சபையிலும் அன்றைக்கு ரெவினியூ இலாகாவுக்கு 18¼ லட்சம் பணம் வேண்டுமென்று வரவு செலவுத்திட்டம் வந்தபோது 100 ரூபா வெட்டுப் பிரேரணை கொண்டுவரப்பட்டு நிறைவேறி விட்டது. சென்னைத் துரைத்தனத்தின் ரெவினியூ இலாக்கா நிர்வாகம் நன்றாயில்லை யென்பதைக் காட்டுவதற்கே அந்த 100 ரூபா வெட்டுப் பிரேரணை கொண்டுவரப் பட்டது. சர்க்கார் அங்கத்தினர்களும் செல்லப் பிள்ளைகளான சில நியமன அங்கத்தினர்களும் சேர்ந்து 25 பேர் சர்க்கார் பக்கம் வோட்டுத் தந்தனர். ஆனால் சர்க்கார் போக்கை எதிர்ப்பதாக 52 வோட்டுகள்! இப்போது சட்டசபையினரின் முடிவைக் காலில் போட்டுத் துவைத்துவிட்டு இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தமது விசேஷ அதிகாரத்தால் கவர்னர் அநுமதித்துவிடலாம். அப்படி நடந்தால் இந்தச் சர்க்காருக்கு விவசாயிகளிடம் எவ்வளவு கருணை இருக்கிறதென்பது விசதமாகிவிடும். ஆனால் அன்று வோட்டெடுத்த சமயத்தில் பாத்ரோ என்ற மகான் மட்டும் சர்க்கார் பக்கம் வோட்டுத் தந்தாரே, அதுவும் நமது நினைவி லிருக்கவேண்டிய விஷயம் தான்.

சென்னை சர்க்காரே, கவனி!

விலை போகாமல் நெல்லைச் சேரில் கட்டி வைத்துக்கொண்டு நமது விவசாயிகள் தவித்துக் கொண்டிருக்கின்றனர். அந்நிய அரிசியின் இறக்குமதி வெகுவாக நமது நெல் வியாபாரத்தைப் பாதித்துவிட்டது; நெல் விலையையும் தாக்கிவிட்டது. இந்தச் சமயத்தில் சென்னைத் துரைத்தனம் மனது வைத்தால் ஒரு காரியம் உடனே செய்யலாம். போன ஸெட்டில்மெண்டின் போது நெல்லுக்கு என்ன விலை வைத்துச் சர்க்கார் வரி விகிதங்களைப் போட்டார்களோ அந்த விலைக்கு விவசாயிகளிடமிருந்து அத்தனை நெல்லையும் சர்க்காரே விலைக்கு வாங்கி வைத்திருந்து, அந்நிய அரிசி இறக்குமதியைத் தடுத்த பின்பு, ஓர் நிரந்தர விலையை நிர்ணயித்து விற்கலாம். இன்றைக்கு ஜப்பான் அரசாங்கம் இதைத்தான் செய்து வருகின்றது. அத்தனை நெல்லையும் அந்தத் தேச விவசாயிகளிடமிருந்து ஓர் விலைக்கு வாங்கி வேற்று நாடுகளுக்கு அனுப்பி ஜப்பான் சர்க்காரே விற்பனைக்கும் ஏற்பாடு செய்கிறது. இந்த முறையைச் சென்னைச் சர்க்கார் பின்பற்றினால் விவசாயிகளுக்கும் நலமுண்டு; அந்நியப் போட்டியையும் தடுக்கமுடியும். சர்க்காருக்கும் லாபமேயன்றி நஷ்டமில்லை. சென்னைச் சர்க்கார் செய்யுமா?

ராஜேந்திரரைச் சந்தித்தாலென்ன!

பீஹாரர்ப் பிரதேசத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு சீக்கிரத்தில் வைஸ்ராய் டெல்லிக்குத் திரும்பி விட்டாராம். இந்தப் பூகம்பத்தினால் அந்தத் தேசத்தில் எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறதென்பதை அவர் கண்ணால் கண்டிருக்கக்கூடும். கஷ்ட நிவாரணத்திற்காகச் சர்க்கார் உதவிசெய்வது போதுமா வென்பதை வைஸ்ராயேயன்றி ஆலோசிக்கவேண்டும். மேலும் வைஸ்ராய் பீஹாருக்குச் சென்றபோது இன்னுமொரு காரியம் செய்திருந்தாரானால், எவ்வளவோ சிலாக்கியமாக இருந்திருக்கும். இன்றைக்கு பீஹார் கஷ்ட நிவாரணத்துக்காக, பாபு ராஜேந்திரப் பிரசாதும் அவரது தொண்டர்களும் செய்துவரும் அரிய ஊழியத்தைப் பற்றி ஆங்கிலேயர்களே சிலாகித்துப் பேசுகின்றனர். அவரையும் வைஸ்ராய் சந்தித்துப் பேசிவிட்டுச் சில ஆலோசனைகளைச் சொல்லிவிட்டுப் போயிருந்தால், அது எவ்வளவோ அழகாயிருந்திருக்கும். ஆனால் வைஸ்ராய் என்ன காரணத்தாலோ ராஜேந்திரரைச் சந்திக்காமலே போய் விட்டார்.

நலங்கு சபை மாதிரி

அட ராமா! பேசுவதற்கு வெட்கப்பட்டுக் கொண்டிருப்பவர்களும் பேசத் தெரியாதவர்களும் திறமையற்றவர்களுமே தற்காலச் சட்டசபையை நிரப்பிக் கொண்டிருக்கிறார்களென்பதற்கு ஐக்கிய மாகாணச் சட்டசபையின் நடவடிக்கையே சிறந்த உதாரணமாகும். சில வருஷங்களுக்கு முன்னே அதே சபையில் பேசுவதற்குச் சமயம் கிடைக்கவில்லையே என்று அங்கத்தினர்கள் பலர் சொல்லியதுண்டு. ஆனால் இந்த வருஷம் வரவு செலவுத் திட்டம் சர்ச்சைக்கு வந்தபோது ஒரு ஆளாவது எழுந்து பேசத் துணியவில்லையாம். சபையின் தலைவர் யாராவது எழுந்திருப்பார்களா வென்று காத்துக்கொண்டே யிருந்தாராம். நலுங்குச் சபையில் பெண்கள் பாடுவதற்கு "நீ நான்" என்று பேசிக்கொள்வார்களே அதேமாதிரி ஒருவர் மூஞ்சியை இன்னொருவர் பார்த்துக் கொண்டு அங்கத்தினர்கள் உட்கார்ந்திருந்தனராம். வெகு நேரம் காத்துவிட்டுச் சபையைக் கலைத்துவிட்டாராம் தலைவர். வேறென்ன செய்வார் பாவம். ரொம்ப பேஷ்! நல்ல பிரதிநிதிகள்!

நர்ஸுகளைப் பற்றி

"ஒரு பிரிட்டிஷ் நர்ஸை இராணுவத்தில் நியமித்தால் குறைந்த பட்சம் 265 ரூபா சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆங்கிலோ இந்திய நர்ஸாயிருந்தால் 220 ரூபா சம்பளம் தரவேண்டியிருக்கிறது. இதைவிடக் குறைந்த சம்பளத்துக்கு இராணுவ நர்ஸுகள் இந்தியாவில் கிடைக்காதிருக்கின்றதே, என்ன செய்வது?" என்று டெல்லிச் சட்டசபையில் இராணுவ மான்யத்தைப் பற்றிப் பேச்சு வந்தபோது சர்க்கார் தரப்பினர் சொன்னார்கள். குறைந்த சம்பளத்தில் இந்தியாவிலேயே திறமையுடைய நர்ஸுகள் கிடைப்பதில்லை யென்பது சரியான வார்த்தையாகுமா? நாளைக்கே சர்க்கார் ஒரு விளம்பரம் போடட்டுமே. எத்தனை நர்ஸுகள் வேணுமானாலும் சென்னை மாகாணம் மட்டுமே சப்ளை செய்யுமென்பதைச் சர்க்கார் தரப்பினர் உணர்ந்து கொள்ளட்டும். சும்மாப் பேச்சுக்காக, வாதத்துக்காக, எதையாவது சொல்லி விடுவதா என்ன?

சிறையில் ஜவஹருக்கு

இரண்டு வருடங்கள் ஜவஹர் சிறையிலிருக்க வேண்டுமென்பது அன்றைக்குத் தரப்பட்ட தீர்ப்பு. இந்த இரண்டு நீண்ட வருடங்களை உணர்ச்சி எரிமலை போன்ற ஜவஹர் எப்படிக் கடக்கப் போகிறாரோ தெரியவில்லை. போன சிறை வாசத்திலாவது அவருக்கு எழுதுவதற்கு வசதிகள் தந்திருந்தது சர்க்கார். காலத்தை வீணாக்காது ஜவஹரும் தமது குமாரத்திக்குச் சில கடிதங்களை எழுதிக்கொண்டிருந்தார். அந்தக் கடிதங்கள் இந்திய இலக்கியத்திலேயே ஓரிடம் பெறுதற்குரிய யோக்கியதை பெற்றுவிட்டன. அப்படித் தேசத்துக்கும் உலகக் கருத்துக்கும் உதவக்கூடிய அந்த பண்டித ஜவஹருக்கு இந்தச் சிறை வாசத்தில் எழுத்து வசதிகள் மறுக்கப்படுகின்றனவாம். சொந்த வீட்டுக் காரியங்களுக்காக எழுதுவதற்கு மட்டுமே அவ்வப்போது கடிதங்கள் தரப்படுமாம். இந்தச் செய்தி வாஸ்தவமாயின் உடனே வங்காள கவர்ன்மெண்டின் தவறைச் சுட்டிக்காட்டி மத்திய சர்க்கார் திருத்த வேண்டும். எழுதுவதற்கு ஜவஹர்லாலுக்குக் கடுதாசியும் பென்ஸிலும் கொடுப்பதால் சர்க்காருக்குப் பிரமாதச் செலவு ஆகிவிடாது. அதனால் குடியும் முழுகிவிடாது. ஒரு பொருளாதார ஏற்பாட்டுத் திட்டம் வேண்டுமென்று டெல்லிச் சட்டசபையில் இன்றைக்குப் பிரமாதமாகத் தர்க்கித்துக் கொண்டிருக்கிறார்களே, வேணுமானால் பிரிட்டிஷ் சர்க்கார் பண்டித ஜவஹர்லாலை வாய்விட்டுக் கேட்கட்டுமே. அவர் மனது வைத்தால் சில தினங்களுக்குள் ஒரு திட்டத்தைத் தயாரித்துத்தர அவருக்கு அபாரமான அறிவுண்டு. அப்பேர்ப்பட்ட ஒரு அறிவாளிக்குச் சிறை வாசத்தில் எழுத வசதி தராதிருப்பது சரியாகுமா? இதைப்பற்றி டெல்லிச் சட்டசபைப் புலிகள் ஏன் சர்க்காருக்கு இன்னும் அறிவுறுத்தவில்லை?

BOOKS by MAHATMA GANDHI

(in English)

	Rs.	A.
Satyagraha in South Africa	... 4	8
Young India Vol. I	... 4	0
Young India Vol. II	... 4	0
A Guide to Health	... 0	12
Neethi Dharma	... 0	8
Indian Home Rule	... 0	8

ஆஹா பிரகஸ்பதிகளே!

டெல்லியில் ஸர்வ கலாசாலைப் பிரமுகர்கள் கூடியிருக்கிறார்களென்று முன்னே சொன்னோமல்லவா. அந்த மகாநாட்டில் முக்கியமான ஓர் தீர்மானம் ஸ்ரீயுத சத்தியமூர்த்தியால் கொண்டுவரப்பட்டது. “ஸர்வகலாசாலைகளில் தாய்ப் பாஷைகளிலேயே பாடஞ்சொல்லித் தருவதற்கு முடியுமாவென்பதைப்பற்றி ஆராய வேண்டும்” என்பது அந்தத் தீர்மானம். இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பண்டித மதன்மோகன் மாளவியா வெகு அழகாகப் பேசினார். மாணவர்களுக்குத் தாய் மொழியில் சொல்லிக் கொடுப்பதுதான் சுலபமென்பதையும் சுட்டிக் காட்டினார். அங்கிருந்த இதர பிரகஸ்பதிகளுக்கு இது தலையிலேறவில்லை. இந்தியாவில் பல பாஷைகளிருப்பதால் ஆங்கிலத்தின் மூலம் பாடங்கள் நடத்துவதே சவுகர்யமென்று அவர்கள் கூறினார்கள். கடைசியில் எதிரிகள் மூன்று வோட்டுகளில் வென்றுவிட்டார்களாயினும், இந்தப் பிரகஸ்பதிகளின் தீர்ப்பை அறிஞர் லட்சியம் செய்ய மாட்டார்கள். பாடம் சொல்லித்தரத் தாய் மொழிகளே சிறந்தவை என்பதுதான் சத்யமான சமாசாரம். தாய்மொழிப் படிப்பு வந்துவிட்டால் தங்கள் உத்தியோகங்களுக்கு ஆபத்து வந்துவிடுமோவென ஆக்ஸ்போர்டு படிப்பாளிகள் நினைத்துப் பயப்படுவது சகஜமே. ஆனால் தேச முன்னேற்றத்துக்கு அவசியமான அந்தத் தீர்மானத்தை விலக்கியது தேசத்ரோகமாகும். இப்பேர்ப்பட்ட ஆஸாமிகளிடம் சர்வ கலாசாலைகள் அகப்பட்டுக் கொண்டிருந்தால் தேசத்தில் படிப்பாவது, விருத்தியாகவாவது?

கரையான் கூட்டமா?

“சர்க்கார் ஸிவிலியன்களை இரும்புக் கூடு என்று லாயிட் ஜார்ஜ் வர்ணித்தார். ஆனால் அரசுமுறையைத் தின்று விடும் கரையான்களென்றே அவர்களைச் சொல்ல வேண்டும்” என்று பூபதிசிங் டெல்லிச் சட்டசபையில் சொன்னார். இந்த உபமானத்தைக் கேட்டால் கலெக்டர்களும் இதர ஸிவிலியன்களும் மகா கோபப் படுவார்கள். உபமானம் ஒரு புறமிருக்க, சர்க்கார் தேசத்தை அடக்கியாள்வதற்காக ஒரு அடி குதித்தார்களானால் ஸிவிலியன்கள் எட்டடி தாண்டுபவர்களாயிருக்கிறார்கள்.

முழித்துக்கொண்டார்

“இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து” என்ற வார்த்தைகளை ஒரு சமயம் வெகு தைரியமாக முழங்கிவிட்டார் வில்லிங்டன் பிரபு. ஸாலிஸ்பரிப் பிரபு என்பவர் உடனே பார்லிமெண்டில் ஒரு கலக்குக் கலக்கிவிட்டார். அதெப்படி? விஷயமோ விசாரணையிலிருந்து கொண்டிருக்கிறது. இந்த வைசிராய் வாயால்தான் எப்படி அந்த நாராசம்போன்ற வார்த்தைகளை உச்சரிக்கலாம்? கூட்டுக் கமிட்டி நீதிபதிகள் விசாரித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியாவுக்கு எந்த விதமான ‘தண்டனை’ விதிக்கலாமென்ற முடிவே இன்னும் ஆகவில்லை. அதற்குள்ளேயே “குடியேற்ற நாட்டந்தஸ்து” என்ற சொற்களை எப்படிச் சொல்லலாம்? நல்ல மாட்டுக்கு ஒரு சூடு போதாதா? வில்லிங்டன் பிரபு முழித்துக்கொண்டார். சமீபத்தில் ஒரு பிரசங்கம் செய்தார் நமது வைசிராய்ப் பிரபு. “பிற குடியேற்ற நாடுகளுடன் சமத்துவம் பெறவேண்டுமென்று இந்தியா ஆசைப் பட்டுக்கொண்டிருக்கும் இலட்சியம்” என்று விரிவுரை செய்துவிட்டார். இந்தியா எதற்கு வேண்டுமானாலும் ஆசைப்படலாம் என்பது இதன் அர்த்தமல்ல; ஆனால், இந்தியா தன் இலட்சியத்தை எட்டிவிடப் போகிறது என்ற அர்த்தமும்தான் கிடையாது. வில்லிங்டனின் முழிப்பே முழிப்பல்லவா?

கம்பர் திருநாள்

ஓய்ந்து அயர்ந்து கிடக்கும் மனிதன் பூர்வ சொத்தைக் கொண்டுதான் உயிர் வாழவேண்டியிருக்கிறது. புராதன வீரர்களின் சரித்திரத்தைச் சொல்லும் மகா காவியங்கள், கற்பனைத் திறனும் செயல் வலியும் குன்றிக் கிடக்கும் ஜனங்களுக்கு உறுதுணையாயிருக்கின்றன. ராம சரித்திரம் உலகிலேயே விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய மூன்று நான்கு மகா காவியங்களுள் ஒன்றாகும். 'இதைத் தமிழ் மக்களுக்குப் பயன்படத் தமிழில் ஆக்கித்தந்த கவிஞன் கம்பன் அந்தக் கவியின் திருநாளை மார்ச்சு மீ 30௳ திருநெல்வேலியில் ஏற்ற முறையில் கொண்டாட நமது நண்பர்கள் சிலர் கொண்ட ஓர் கமிட்டி அமைந்திருப்பதை அறிந்து களிப்புறுகிறோம்.

"போடா மனிசப் பதரே!"

[மனிதனையும் மிருகங்களையும் சேர்த்துக் கதை ஜோடிப்பது வெகு காலமாக உலக இலக்கியத்திலுண்டு. பஞ்ச தந்திரத்தை ஆசியாக் கண்டத்தில் ஒரு ஆசிரியன் சிருஷ்டித்தா னென்றால் ஈசாப், ஐரோப்பாவில் அத்தகைய கதைகளைச் சிருட்டித்திருக்கின்றான். இத்தகைய கற்பனை அவர்களோடு முற்றுப் பெறவில்லை. இன்றைக்குக்கூட ஸ்டீபன் கிங்ஹால் என்ற ஆங்கிலேயர் டைம் அண்டு டைடு பத்திரிகையில் அத்தகைய கற்பனையொன்றை ஜோடித்திருக்கிறார். ஆயுதப் பரிகரண மகாநாட்டையும், ஸர்வதேசச் சங்கத் தீர்மானத்தையும், மனித வாழ்வையும் கேலி செய்து, கிங்ஹால் எழுதி யிருப்பதின் மொழிபெயர்ப்பு அடியில் தரப்படுகின்றது.

—சங்கு. ஸுப்ரஹ்மணியன்.]

காட்டின் நடுவே ஒரு திடல். அதன் நடுவே ஓர் பாறை. அப்பாறை மீது சிங்கம் என்ற மிருகேந்திரன் அமர்ந்திருந்தான். அந்தச் சிங்காதனத்தை உற்று நோக்கிக்கொண்டு திடலின் மூலையைச் சுற்றி யானைக் கூட்டம் நின்று கொண்டிருந்தது. சிங்காதனத்தின் பாதத்தருகே ஜம்புகன் அமர்ந்திருந்தான். மரக்கிளைகளில் குரங்குகளும் குயில்களும் இருந்தன. இதர மிருகங்களும் அந்தத் திடலில் காணப்பட்டன. யானைக்கூட்டம் ஸலாம் வைத்த பின்பு மிருகேந்திரன் எழுந்திருந்தான். எங்கும் நிச்சப்தம் குடிகொண்டது.

"பல மிருகங்கள் செய்த வேண்டுகோளுக்கேற்ப, இன்று நமது தர்பார் கூட்டப்பட் டிருக்கிறது. இங்குள்ள காட்டு மிருகங்களுக்கெல்லாம் நான் தான் அரசன். இன்று ஓர் நாட்டு மிருகம் வந்து தன்னையும் காட்டு மிருகங்களோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென விண்ணப்பம் போட்டிருக்கிறது." இதைக் கூறியபின்பு மிருகேந்திரன் சிறிது சும்மாவிருந்தான். சபையை ஒரு தடவை சுற்றி நோக்கிவிட்டுப் பின்னர் கம்பீர தோரணையில் சொன்னதாவது:—"அந்த விண்ணப்பதாரி தனது கட்சியை நம் முன்னிலையில் சொல்லிக் கொள்ளட்டும்." உடனே இரண்டு ஓநாய்களால் காவல் காக்கப்பட்டிருந்த ஒரு மனிதன் அங்கு கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். இவனைத் தான் 'நாட்டு மிருகம்' என மிருகேந்திரன் அழைத்தானென்று அப்போது சபையோருக்கு விளங்கிற்று.

"அப்பா, உன் கட்சியைச் சொல்லு" என்றான் மிருகேந்திரன்.

மனிதன் சொன்னதாவது:—

"மிருகேந்திரா! உலகிலுள்ள ஜீவப் பிராணிகளிலெல்லாம் மிகமிகக் கேவலமான ஜன்மம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. என்னை நாகரிக மனிதனெனச் சொல்லுவார்கள். முன்னொருக்கால் நானும் அவர்களைப் போலச் சுதந்திரனாகவே இருந்தேன்" என்று கூறிவிட்டு மரத்திலிருந்த மந்தி வர்க்கத்தை விரலால் சுட்டிக் காட்டினான். சில குரங்குகளுக்கு இந்த வார்த்தை பிடிக்கவில்லையாம். சில மரத்திலிருந்த தேங்காய்களைப் பறித்து இந்த மனிசப்பயலை அடிக்கலாமா என்றுகூட யோசித்தனவாம். மனிதன் தொடர்ந்து கூறத் தொடங்கினான். "ஆனால் நான் ஒரு காலத்தில் பெரிய தவறொன்றையிழைத்தேன். இயற்கை வாழ்க்கையினின்று விலகிப் போய்விட்டேன். அதன் பயனாக இன்றைக்கு நான் வாழும் வாழ்க்கை மிக்க அவமானமாயிருக்கிறது. நான் வசிக்கும் வீட்டை வந்து பார்த்தீர்களானால் உங்களுக்குத் தெரியவரும். சுயேச்சையான நீங்கள் ஒரு நிமிஷம்கூட அதில் வாழ விரும்பமாட்டீர்கள். பந்தயக் குதிரைகள் வாழும் லாயமாவது எவ்வளவோ தேவலை. அதைவிடக் கேவலமாக இருக்கிறது நான் குடியிருப்பதாகச் சொல்லப்படும் வீடு என்ற கூடு. எனது வீட்டைவிட மிக மேன்மையாக ஜெயில் இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது."

"ஜெயிலா! அப்படி யென்றால் என்ன?" என்று மிருகேந்திரன் நடுவில் ஒரு கேள்வி போட்டான்.

மனிதன் விவரிக்கத் தொடங்கினான்: "ஜெயில் என்பது ஒரு பெரிய கட்டிடம். வெகு சுத்தமாக வைத்திருப்பார்கள். அங்குள்ள மனிதர்களுக்கு இலவசச் சாப்பாடுண்டு. தனித்தனி அறையுண்டு. சட்டத்திற்கு யார் யார் உட்படவில்லையோ அவர்களையெல்லாம் அங்கு அடைப்பார்கள்."

"சட்டம் என்றால் என்ன?" என்று கேட்டான் மிருகேந்திரன்.

"சட்டம் என்பது நீதிஸ்தலங்களில் உபயோகிக்கப்படும் ஒரு பதம். தற்போதுள்ள ஜன சமூகத்தை ஒரு கட்டுப்பாடாக எப்போதும் வைத்திருப்பதற்காகச் சில திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவைகளைத்தான் சட்டங்கள் என்று மனித வர்க்கத்தினராகிய நாங்கள் சொல்கிறோம்."

"ஓ அப்படியா? நீ அந்தக் கட்டுப்பாட்டுகளினின்று விடுதலை யடைய விரும்புகிறாய் போலும்!" என்று வியப்புக் குரலில் கூறினான் மிருகேந்திரன். பதிலும் கேள்வியும் தொடர்ந்தன.

"அரசே! அதுதான் எனது ஆசை!"

"இந்த மாதிரி உலகத்திலுள்ள எல்லோருக்கும் ஆசை கிடையாதா? ஏதோ 'ஜெயில்' என்று ஒரு நல்ல இடம் இருக்கிறதென்றீரே அந்த இடத்திற்கு அநேக மக்கள் போவதுண்டா?"

"சிலர்தான் ஜெயிலில் அகப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால் மனித வர்க்கம் 'சுயேச்சை'யாக வெளியுலகில் இருப்பதற்கே பெரும்பாலும் ஆசைப்படும். உயிரைவிடச் சிறந்தது சுதந்திர வாழ்க்கை யன்றோ!"

"அப்படியானால் இப்போது மனிதர்கள் சுதந்திர வாழ்க்கையிலிருப்பதாகச் சொல்லுகிறாய் போலும்!"

"அப்படி நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் மனிதர்கள். உண்மையில் பார்க்கப்போனால் மனித சமூகத்தில் துளிக்கூடச் சுதந்திர வாழ்வு கிடையாது. ஏதோ மனதில் அதைச் சுதந்திரமென்று கற்பனை செய்துகொண்டு வாழ்ந்து வருகின்றனர்."

"சரி, அதிருக்கட்டும். அப்பேர்ப்பட்ட 'நாகரிக' வாழ்க்கையை விட்டுவிட்டு நீ ஏன் இங்கு வருகிறாய்? உங்கள் நாகரிகத்துக்கு நிதரிசனமாக நாங்கள் அடிக்கடி ஒரு சாமானைப் பார்க்கிறோம். பட்சி மாதிரி ஒரு சாமான் சத்தம்போட்டுக் கொண்டு ஆகாயத்தில் பறந்துபோவதை நாங்கள் கண்டிருக்கிறோம். அவைகளை விட்டு நீ ஏன் காட்டு வாழ்வை விரும்புகிறாய்?"

"காட்டு மிருக வாழ்க்கையே மேலென்று நான் நினைக்கும்படி ஏற்பட்டதற்கு லண்டனில் நடந்த சர்வ தேசப் பிரதிநிதிகளின் கூட்டம்தான் காரணம். அந்தக் கூட்டம் திருப்திகரமாக முடிவுபெற்றதாக அவர்கள் சொல்லிக்கொண்டார்கள்."

"எல்லாத் தேசத்தினின்றும் பல தினிஸு மனிசர்கள் வந்திருந்தார்கள் போலும்."

"ஆமாம்! அவர்களெல்லாம் அங்கு கூடி இனிக் காடுகளை அழிக்கக்கூடாதென்றும் காட்டு மிருகங்களை அப்படியே காப்பாற்ற வேண்டுமென்றும் முடிவு செய்தார்கள்." இதை மனிதன் சொன்னபோது மூலையிலிருந்த பாம்பொன்று, "இந்த மனிதர்களின் நய வஞ்சகத்தை ஒருபோதும் நம்பலாகாது" என்று முணுமுணுத்தது. மனிதன் பின்தொடர்ந்து கூறினான்.

"மிருகங்களைக் கொல்வதில்லை என்று மனிதன் தீர்மானித்தது இருக்கட்டும். இனி மனிதனை மனிதன் கொன்று குவிப்பதில்லை என்ற சத்தியத்தை எல்லோரிடமும் வாங்கிக்கொள்வதற்காக ஜினிவா என்ற இடத்தில் ஓர் மகாநாடு நடந்தது. எல்லாத் தேசங்களினின்றும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஆனால் அந்தத் தீர்மானம் தோற்றுவிட்டது."

"கூட்டங் கூட்டமாகக் கொன்றால் அது கொலைக் குற்றமல்லவோ?" என்று மிருகேந்திரன் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"கூட்டங் கூட்டமாகக் கொன்று குவிப்பதற்கு 'யுத்தம்' என்று பெயர். அது சட்ட ரீதியாக 'நியாய'மானது. சென்ற மகா யுத்தத்தில் உங்கள் எதிரே நிற்கும் நான்கூட என் சகோதர வர்க்கத்தில் மூவரை என் கையினாலேயே கொன்று வீழ்த்தினேன். அதற்காக எனக்கு மெடல்களும் பரிசுகளும் தந்தார்கள். அந்த மெடல்களை வைத்துக்கொண்டு வீட்டில் எனது குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றன. விசேஷ சமயங்களில் அந்தக் கொலைச் சின்னத்தை அணிந்துகொண்டு நான் மினுக்குவதுண்டு. எனது வலது மார்பில் இன்னொரு மெடல் போட்டுக் கொள்வதுண்டு. ஒரு காலத்தில் ஒரு மனிதனை நான் சாவினின்று தப்பித்துவிட்டேன். அந்த மேன்மைக் காரியத்துக்காக அந்த மெடல் எனக்குப் பரிசளிக்கப்பட்டது. பிறருக்கு சாவூட்டியதற்கும் பரிசு, சாவினின்றும் தப்பித்து வைத்ததற்கும் பரிசாம்! இதுதான் மனித வர்க்கத்தின் ஹம்பக் முறை. இந்தப் பேத்து மாத்து, தில்லு முல்லு, கட்டுப்பாடு, சட்ட திட்டம். கற்பனை, நாகரிக மேனா மினுக்கு இதை யெல்லாம் பார்த்துப் பார்த்து எனக்கு அலுத்துப் போய்விட்டது. ஆகவே இந்தக் காட்டில் சுயேச்சையாக வாழ்ந்து செத்துப் போகலாமென நினைத்து விண்ணப்பம் போட வந்திருக்கிறேன்" என்று ஒரு சிறிய பிரசங்கம் செய்துவிட்டான் அந்த மனிதன்.

"நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்? இவனை நாம் மிருகங்களோடு சேர்த்துக் கொள்வதில் யாருக்காவது ஆட்சேபனையுண்டா?" என்று மிருகேந்திரன் சபையைக் கம்பீரமாக ஓர் பார்வை பார்த்துக் கேட்டான்.

பழைய காலத்துக் குரங்கொன்று மரத்துக்கு மரம் தாண்டிக்கொண்டிருந்ததை நிறுத்திவிட்டு, சபையிடையே குதித்து மனிதன் பக்கலில் வந்து நின்று சொல்லத் தொடங்கிற்று. பேசப்பேச அதன் தொண்டை வெகு உச்சஸ்தாயிக்குப் போய்விட்டது.

"அட பயலே! எங்கள் குலத்தைக் கெடுத்த கோடாரிக் காம்பே! எப் ஜாதியின் மூளையைத் திருடிக்கொண்டு ஓடிவிட்ட பயல்களின் வம்சத்தினனல்லவா நீ! அந்த இரத்தவெறி பிடித்த மனித ஜாதிக்கே நீ போய்விடு. அந்த ஓட்டை வீடுதான் உனக்கு லாயக்கு. புகை, சத்தம், பாக்டரி, கிராமவாஸத்தின் அழகைக் கெடுக்கும் படாடோபங்கள் இவைதான் உங்கள் தலையெழுத்து. பட்சிகளைச் சுட்டுச் சுட்டுத் தின்று காலங்கழிக்கிறீர்களாமே! அர்த்தமில்லாது கூடிக்கூடிப் பேசி உங்கள் இருதயங்களிலுள்ள எண்ணத்தை மறைத்து வைத்துக் கொள்கிறீர்களல்லவா? உனக்கு உன் ஜாதிதான் சரி. உங்கள் அடக்கு முறைதான் உங்களுக்குச் சரி. நியாயம் என்று கற்பனை செய்துகொண்டிருக்கிறீர்களே அதுதான் சரி. பணக்காரன் ஏழையென்று பிரிந்து வாழ்கின்றீர்களே அதுதான் உனக்குப் பிடித்தமானது. உங்கள் ஸ்திரீகளின் பலஹீனத்தால் சிசு மரணம் ஓர் புறத்தில் அபரிமிதமாயிருக்க, துப்பாக்கி வாங்குவதற்கும் பீரங்கி வாங்குவதற்கும் காசை வாரி வாரி வீசுகின்றீர்களாமே அந்தக் கேவலம்தான் உனக்குச் சரியான வாழ்க்கை. 'காசு' என்று ஒரு சாமானுக்குக் கற்பனை மதிப்புத் தந்திருக்கிறீர்களே அட அசடுகளே! சாதாரணமாய் நல்ல புத்தியுடனிருப்பவர்கள் சோற்றுக்குத் திண்டாடும்போது பயித்தியக்காரர்களுக்கு விடுதி கட்டிவைத்துச் சுகமாக இருக்குமாறு செய்கின்றீர்களாம். உள்ளே யிருப்பவர் பயித்தியமா? வெளியே யிருப்பவன் பயித்தியமா? பிரமாதமாகப் பிள்ளையையும் குட்டியையும் பெற்றுக்கொண்டு 'நாம்தான் சிருஷ்டிகர்த்தா!' என்ற மமதை கொண்டு அலைகின்றீர்களே அந்தக் கூட்டத்திற்கு நீயும் ஒழிந்து போ!" என்று கூறி ஏளனமாகச் சிரித்தது குரங்கு. அதன் கண்களில் பல்லாயிர வருஷக் கணக்காக இருந்த அத்தனை ஆத்திர உணர்ச்சியும் பொங்கி வழிந்தது போலிருந்தது.

தொடர்ந்து குரங்கு பேசத் தலைப்பட்டது:—"மிருகேந்திரா! இவர்களே வலைகளைப் போட்டு இவர்களே மாட்டிக் கொள்கிறார்கள். எல்லா ஆபத்துகளும் இவர்களாகச் செய்துகொண்டதேயன்றி வேறில்லை. இதை 'நாகரிகம்' என்றும் கூறிப் பீற்றலடித்துக் கொள்கிறார்கள். இவனை இங்கே நுழையவிடக் கூடாது" என்று ஆவேசத்தோடு கூறிற்றுக் குரங்கு.

உடனே மிருகேந்திரன் தீர்ப்புக் கூறினான். "ஏ மனிதா! உனது பழைய உறவுக்காரர் சொன்னதையே கேட்டாயோ இல்லையோ! எங்கள் பிரதேசத்தில் உன்னைச் சேர்த்துக்கொள்ள முடியாது. ஆனால் நீ சுதந்திரத்தில் பரம வேட்கை கொண்டிருப்பதாகச் சொல்கிறாய். உன்மீது எனக்கு இரக்கம் ஏற்பட்டது விட்டது. சர்வ கஷ்டங்களினின்றும் உனக்கு விடுதலை தருவதே எனது ஆசை" என்று சொல்லினான் மிருகேந்திரன்.

பக்கத்தில் நின்ற ஓநாய்கள் திடீரென்று மனிதனைப் பற்றிக்கொண்டன. சிங்காதனத்தினின்று அரசன் ஓர் பாய்ச்சல் பாய்ந்து மனிதனை ஓர் அறை விட்டான். விழுந்தான் கீழே மனிதன். யானைகள் ஹுங்காரம் செய்தன. திடலின் நடுவை நோக்கி அத்தனை யானைகளும் நடந்தன. அந்த மனித உடல் எந்த மண்ணினின்று தோற்றிற்றோ அந்த மண்ணோடு மண்ணாக ஒரே கணப்பொழுதில் ஆகிவிட்டது.

"பசி!"

(அசுவதி எழுதியது)

கோடைகாலம். பகற்பொழுது. நடுப் பகல் நேரம். கதிரவன் வானுச்சியில் ஊசலாடிக்கொண் டிருக்கிறான். மேல் திசையை நோக்கியே அவன் கால்கள் இழுக்கின்றன. மேகங்கள் ஓடி ஒளிந் திருந்த இடத்தையே கண்டு பிடிக்க முடியவில்லை. வெயில் சுள்ளென்று அடித்துக்கொண் டிருக்கிறது, உஷ்ணக் காற்று வீசிக் கொண்டிருக்கிறது; தேகத்தில் பட்டமாத்திரத்தில் ஒருவித எரிச்சலைக் கிளப்பிவிடுகிறது. வெப்பத்தின் கொடுமைக்கு ஆற்றாது தெருவோர் யாவரும் வீட்டினுள் அடங்கிக் கிடக்கின்றனர்.

தெருவெங்கும் நிசப்தம். ஆள் நடமாட்டமே காணோம். எச்சிற்கலைகளுக்கு 'எங்கே யெங்கே' என்று காத்துக் கொண்டிருக்கும் நாய்களும் மாடுகளும்கூட, அவை விழக்கண்டும், அசையாமல் நிழலோரங்களில் பதுங்கிப் படுத்திருந்தன. அடே! ஒரு காகம்! அதைக் கூடக் காணோமென்றால் கடுங் கோடையின் தகிப்பை என்னென்பது?

"ஒரு ஐந்து நிமிஷத்திற்காவது, கார் மேகம் நாற்புறமும் சூழ்ந்து, இவனை மறைக்காதா இவன் கொட்டம் அடங்காதா" என முணுமுணுத்துக் கொண்டே வாசலுக்கு வந்தேன்.

எங்கள் வீட்டுக்கு எதிரில் ஒரு சத்திரம் உண்டு. அதைச் சுற்றி ஒரு சிறு நந்தவனமும்கூட. ஆனால் சாதாரண அரளி, அந்திமந்தாரை, காட்டு ரோஜா இவைபோன்ற மலர்ச் செடிகளே மிகுந்திருந்தன. எங்கள் தெருவில் சிறிது குளுமையான இடம் இதுவொன்று தான். சாப்பிட்டானதும், வெயிற் பொழுதைப் போக்குவதற்குப் பலர் அங்கே கூடிவிடுவார்கள்.

விசாலமான திண்ணை. சங்கப்பலகை போன்றது. வருகிறவர்களுக்கெல்லாம் இடம் கொடுக்கும். மகராசன் ஒருவர் கட்டிவைத்துப் போயிருக்கிறார். அத்துடன் தினம் வழிப்போக்கர் எட்டுப் பேருக்குச் சமைத்துச் சாப்பிடுவதற்கு வேண்டிய உணவுப் பொருள்கள் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்திருந்தார். அந்தத் தர்மம் இன்று வரை ஒழுங்காகத்தான் நடைபெற்று வருகிறது.

சத்திரத்துத் திண்ணைக்கு நான் வரவும் அஜீர்ணமய்யரும்—அது நாங்கள் சுந்தரமய்யர் என்ற அவருக்கு இட்ட காரணப் பெயர்—வந்து சேர்ந்தார். எங்கள் திண்ணைப் பேச்சு ஆரம்பமாயிற்று.

"சாப்பாடு ஆகிவிட்டதா," என்றேன்.

"ஆகிவிட்டது. இராத்திரிச் சாப்பாடே ஜீரணமாகவில்லை' என்றார் அஜீரணமய்யர், தயங்கித் தயங்கி ஏப்பம் விட்டுக் கொண்டே.

"ஓய்! உமக்கு ஜீரணமாவதற்கு ஒரு வழி சொல்கிறேன் கேளும்."

"என்ன?"

"சாப்பிட்டானதும், ஜீரணமாகவில்லை ஜீர்ணமாகவில்லை என்று சஹஸ்ர நாமம் செய்யும். ஜீரணமாகாவிட்டால் என்னைக் கேளும்."

"அப்படியே செய்யறது" என்றார் அவர் சிரித்துக்கொண்டே.

எங்கள் பொருளற்ற பேச்சு நித்திரா தேவிக்குப் பிடிக்கவில்லை. எங்கள் கண்களையும், வாயையும் மந்திரத்தால் இறுகக் கட்டிவிட்டாள். அவள் வசமாகி விட்டோம். எங்கள் சம்பாஷணை தானாகவே நின்றது.

கண்ணயர்ந்து ஒரு குறட்டையாவது விட்டிருப்பேனோ என்னவோ தெரியாது. ஏனெனில், 'மகராஜ், மகராஜ்,' என்று இருமுறை கூப்பிட்ட குரல் கணீரென்று என் காதுகளில் தாக்கியதல்லவா? கண் தானாகவே திறந்து கொண்டது. தோரணையும், கம்பீரமும் கலந்த தொனியில் பேசியது யாரெனத் தலை நிமிர்ந்து பார்த்தேன். ஒரு பைராகி!

அவனது அங்க அமைப்பை விஸ்தரிக்க வரவில்லை. சுருக்கம். உச்சந் தலையிலிருந்து உள்ளங்கால்வரை ஒரு முறையல்ல, இருமுறை ஏறிட்டுப் பார்த்தேன். சிவாஜியின் ஞாபகம் தான் வந்தது. மொகலாயருடன் சலியாது சரிசமானமாகப் போராடிய மராட்டியரின் உருவங்களும், வீரச் செயல்களும், என் மனக் கண்முன் தோன்றின. "அட! இவனும் மராட்டியன்தானே. இத்தகைய தேகக்கட்டு வாய்த்திருப்பதில் ஆச்சரியமாக ஏதுமில்லையே' என எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டேன்.

"மகராஜ்! வெகு தொலையிலிருந்து வருகிறேன். அகோரப் பசி. தாளமுடியவில்லை. இந்தச் சத்திரத்தில் ஏதாவது ஆகாரம் கிடைக்குமா" என்று மராட்டியில் கம்பீரமாக வினவினான் பைராகி.

எனக்கு ஹிந்தியில் சிறிது பரிச்சயம் உண்டு. பைராகி பேசிய மராட்டி புரியாமலில்லை. அவன் பேசிய மாதிரியிலிருந்து அந்தக் கம்பீரம் அப்பாஷைக்கு உரியதேயன்றிக் களைப்பினாலும் பசியினாலும் சோர்வுற்று ஈனஸ்வரப்பட்டிருக்கும் அவனது குரலுக்கன்று என்று கண்டு கொண்டேன்.

அவன்மீது இரக்கம் பிறந்தது. அருகிலிருந்த சத்திரத்து அய்யரிடம், "இன்று விநியோகிக்க வேண்டிய பங்குகளில் ஏதாவது மீதமிருக்கின்றதா?" என்றேன்.

"இன்னும் இருவருக்குக் கொடுக்கலாம்" என்றார் அவர்.

"இவனுக்கு ஒரு பங்கு கொடுக்கலாமே," என்றேன் நான்.

அவரும் சம்மதித்து உணவுப் பொருள்களை எடுத்துவரச் சென்றார்.

பைராகியுடன் பேச்சு வளர்க்க வேண்டுமென்ற ஆசை. எனக்கு ஹிந்தி தெரியும் என்று நான் காட்டிக் கொண்டதும் அவன் புன்னகையுடன், "தங்களுக்குக்கு மராத்தி தெரியுமா? தக்ஷிணத்தில் மராத்தி தெரிந்தவர்கள் ஆயிரம், பதினாயிரத்துக்கு ஒருவரைக் கூடக் காண்பது அரிதாயிருக்கிறதே" என்றான். அவனுடைய பேசி, அவனது ஊர், எங்கிருந்து வருகிறான், எங்கே போகிறான், என்பது போன்ற விஷயங்களைக் கிரஹித்துக் கொண்டேன்.

ஒரு ஆளுக்குப் போதிய அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய், மற்றும் சில்லுண்டிப் பதார்த்தங்களுடன் விறகு உள்பட எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தார் சத்திரத்து அய்யர்.

அவை பைராகியின் முன் வைக்கப் பட்டன.

பைராகி முகத்தைச் சுளித்துக் கொண்டான். ஏனோ?

"இனிமேற்பட்டுச் சமைத்து சாப்

பிடுவது எப்பொழுது? அதுவரையில் பசி தாங்காதே," என்பதே அந்தச் பின் அர்த்தமாக இருக்கலாம் என நான் யூகித்துக் கொண்டேன்.

நான் நினைத்ததற்கேற்ப, பைராகி, "மகாராஜ், சமைத்த உணவு கிடையாதா?" என்ருன்.

"கிடையாது; இங்கு இதுதான் வழக்கம்" என்றேன்.

"நல்லது மகராஜ்" என்று பதிலிறுத்துவிட்டு, பைராகி காலைச் சம்மணமிட்டு உட்கார்ந்து கொண்டான். முதலில் அரிசிப் பொட்டணத்தைப் பிரித்தான். பச்சரிசியை அப்படியே எடுத்துப் பிடிபிடியாக அள்ளி வாயிற் போட்டுக் கொண்டான். அரிசி முழுவதும் காலியாகி விட்டது. பருப்பு, உப்பு, புளி உள்ளிட்ட இதர சாமான்களுக்கும் முறையே அதே கதியே சேர்ந்தது.

அதிசயத்தால் கண் கொட்டாது பைராகியையே உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். அவன் சாப்பிட்ட மாதிரியிலிருந்து அரைப்பசிகூடத் தீர்ந்திராதென்று எனக்குத் தோன்றியது. சத்திரத்து அய்யருக்குத் தன்னை யறியாத ஆநந்தம் உண்டாயிற்று. உள்ளே சென்று இன்னொரு பங்கையும் கொண்டுவந்து கொடுத்தார். பைராகியின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

அவைகளையும் அவன் உட்செலுத்திக் கொண்டிருந்தபோது, என் மனம் எண்ணியதாவது—"சாதம் ஒரு கொதி குறைவாக வடித்து விட்டால், விரிசலாக இருக்கிறது, வயிற்று வலி உண்டாகிவிடும் என்றெல்லாம் சொல்லி ஒதுக்கி விடுகிறோமே! இயற்கையில் உண்டான அரிசி, பருப்பு, உப்பு, புளி, மிளகாய் முதலியவைகளை, ருசிகளையும் பொருட்படுத்தாமல், உட்செலுத்தி விடுகிருனே இவன்! ஜீர்ணம்தான் ஆகுமா? குடலென்ன கல்லா, இரும்பா? இவன் ஹடயோகியா? அவர்கள்தான் இப்படிச் செய்வார்கள். கல்லை ஜீரணிக்கக்கூடிய வயது என்று பெரியோர் சொல்லத் தானே கேட்டிருக்கிறோம். இப்படித் தின்பவரை இதுவரையில் பார்த்ததேயில்லையே" என்றெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டே, பிரமித்துப் போய் விட்டேன்.

ஒன்று விடாமல் தின்று பைராகி பெரிய ஏப்பம் விட்டான். அது வாதாபியைத் தின்று ஏற்பட்ட அகஸ்தியரின் ஏப்பம்! எனக்கு அப்பொழுதுதான் உணர்ச்சி வந்தது. பக்கத்தில் உட்கார்ந்திருந்த அஜீரண மய்யரைப் பார்த்து, "ஓய்! நீரும் ஏப்பம் விடுகிறீரே" என்றேன். அவரும் குனிந்து கொண்டார்.

மிஞ்சியது விறகுதான். "என் இதையும் தீர்த்து விடுகிறதுதானே" என்றேன் பைராகியைப் பார்த்து சிரித்துக் கொண்டே.

அவனும் சிரித்துக் கொண்டான். "மகராஜ்! பசியின் வேகம் அடங்கியிராவிட்டால், அதையும் கூடத்தான் தின்றிருப்பேன்" என்ருன் பைராகி.

"என்ன? பசியின் வேகம் அவ்வளவா?" என்றேன்.

"மகராஜ்! அதனல் மட்டுமன்று. உடல் வலிமையும்கூடச் சேர்ந்தது. நாளொன்றுக்கு நான் சராசரி நாற்பது மைல்களுக்குக் குறையாது நடக்கிறேன்" என்ருன் அவன்.

திண்ணையில் படுத்து ஒரு தூக்கம் போட்டுவிட்டு, எங்களிடம் விடைபெற்றுக் கொண்டு தன் வழியே சென்ருன் பைராகி. அவன் தெருக்கோடியில் சென்று மறையும்மட்டும் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினேன்.

பக்கத்தில் நின்றது அஜீரணமய்யர். "என்ன சார்! ஆச்சரியம்! எனக்கு ராத்திரிச்சாப்..." என்று என்னவோ பேச ஆரம்பித்தார். எனக்குப் பொறுமை போய்விட்டது.

"ஓய்! பைராகியைப் போல் ஜீரணிக்க வேண்டுமானல் காந்தாரி செய்ததுபோல் செய்யும்; என்னிடம் வந்து கேட்காதேயும்" என்று படபடப்புடன் சொல்லிவிட்டு, துண்டைத் தட்டிக்கொண்டு கிளம்பினேன்.

அப்பொழுது எனக்குத் தோன்றியது; பாரத புத்திரன் ஒவ்வொருவனும் இப்படி இருந்தால்—

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	....	0	0	6
ஹரிஜனத் தொண்டு	....	0	0	6
ஹரிஜனப் பணி	....	0	0	6
ஹரிஜன விமோசனம்	....	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

ஏஷியன் அஷ்யூரன்ஸ் கம்பெனி

லிமிடெட், பம்பாய்.

இது ஒரே நிதானமாய் அபிவிருத்தி யடைந்து கொண்டு வரும் கம்பெனி; விசேஷமான வசதிகள் உடையது; அருமையான திட்டங்களைக் கொண்டது.

இதற்கு வேலை செய்பவர்களுக்குக் கணிசமான, நிச்சயமான, வருமானம் கிடைக்கிறது.

பிரதிநிதிகள், முக்கியமாகப் பின்கண்ட ஜில்லாக்களுக்கு, தேவை:— வட ஆற்காடு, தென்னுற்காடு, சித்தூர், நெல்லூர், சேலம், செங்கற்பட்டு, தஞ்சாவூர்.

விவரங்களுக்குப்பின் கண்டவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்:—

கிளை ஆபீஸ் மானேஜர்,
117, அரண்மனைக்காரத் தெரு, மதருஸ்.

கள்ளிக்கோட்டை, மங்களூர், குண்டூர், விஜயநகரம் முதலிய விடங்களில் இந்த மாகாணத்தின் இதர கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

வழக்க நோய் !

(தி. ஜ. ர. எழுதியது)

இரண்டு ரேக்ளாவண்டிகளுக்குள் ஒரு பந்தயம் நடந்தது. ராமன் மாடு நிச்சயமாய் வெல்லும் என்பதே எல்லாருக்கும் நினைப்பு. சோமன் மாடு கொஞ்சம் சோனி மாடு. ஓட ஆரம்பித்தபோதும் இந்த நம்பிக்கைக்குப் பாதகம் ஏற்படவில்லை. ராமன் மாடு சூடிகையாகத்தான் புறப்பட்டது; வேகமாகத்தான் ஓடிற்று. சோமன் மாடு பிந்திவிட்டது. ஆனால், பாதி தூரம் போனவுடனே, ராமன் மாடு ஒரு குறுக்கு ரஸ்தாவில் திரும்பி விட்டது. ராமன் என்ன முயன்றும், மாடு ஒரு பர்லாங்கு தூரம் போய்த்தான் நின்றது. அதைத் திருப்பிக்கொண்டு வந்தான். அப்பொழுதும் பந்தய எல்லைக்குப் போகாமலே புறப்பட்ட இடத்துக்கு ஓடிவந்து விட்டது. ராமன் மாட்டுக்கு அந்தக் குறுக்கு ரஸ்தாவிலேயே போய்ப் போய்ப் பழக்கம். அந்த வழக்கம்தான் இந்த விபரீதத்துக்குக் காரணம். இது கதையல்ல, நடந்த சங்கதி.

வழக்கம் என்பது ஒரு அருமையான குணம்தான். நல்ல பழக்கங்களை மனிதன் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். "வழக்கம் மனிதனது இரண்டாவது இயற்கையாகிவிடுகிறது" என்று ஆங்கிலத்தில்கூடச் சொல்லுவார்கள். ஆனால், இந்த வழக்கத்தைச் சம்பாதித்துக் கொள்ளுவதற்கு விசேஷமான சாமர்த்தியம் தேவையில்லை. மேலேயுள்ள உதாரணத்தைப் பார்த்தால், ஜீவப் பிராணிகள் எல்லாவற்றிற்குமே வழக்கம் சுலபத்தில் ஏற்பட்டு விடுகிறது என்பது விளங்கும். ஆகையால், எந்த வழக்கமாவது அறிவுக்குப் பொருத்தமல்ல என்பதை மனிதன் அறியவரும் பொழுது, அந்த வழக்கத்தை உடைத்தெறிய வேண்டும். அதற்குத்தான் விசேஷ சாமர்த்தியம் தேவையாகும்.

அநேகம் பழக்க வழக்கங்கள் நம்மையறியாமலே நம்மைப் பற்றிக் கொண்டு விடுகின்றன. சற்று ஆலோசித்துப் பார்க்கும் பொழுதும், சில புதிய உண்மைகள் எதிர்ப்படும் பொழுதும், நமது பழக்க வழக்கங்களில் பல அறிவுக்குப் பொருத்தமில்லாதிருக்கக் காண்கிறோம். அவற்றை அகற்றினால் தான் நமக்கு முன்னேற்றமென்பது உண்டு. ஆனால், நாம் அப்படிச் செய்ய அஞ்சுகிறோம். யதாஸ்தானத்தில் வேரூன்றியிருப்பது பத்திரமான சங்கதிதான். முன்னேற்ற முயற்சியில், லாப நஷ்டங்களுக்குத் துணியும் துணிச்சல் அவசியமாயிருக்கிறது. தைரியம் இல்லாத பயத்தைக் கெட்டிக்காரத்தனம் என்று சொல்லிக் கொண்டு, அர்த்தமற்ற பழக்கத்துக்கு அடங்கி விடுகிறோம்.

ஒரு துறையில் மாத்திரமல்ல, பற்பல துறைகளில் வழக்கத்திற்கு நாம் சிறைப்பட்டிருப்பதற்குப் பல உதாரணங்கள் காணலாம். ஆசாரச் சீர்திருத்த விஷயத்தில் வழக்கத்தின் பலத்தை நாம் தினமும் கண்டு வருகிறோம். இப்பொழுது, மும்முரமாக வளர்ந்திருக்கும் தீண்டாமை விலக்கு இயக்கத்தைக் கவனியுங்கள். கிராமத்தில் இந்தப் பேச்சை எடுத்தீர்களானால், பெரும்பாலும் உங்கள் பேச்சு எடுபடாமற் போவதையும், என்னென்னவோ கட்சிகள் தோன்றுவதையும் காண்பீர்கள். தீண்டாமைக்குச் சாஸ்திரம் பிரமாணம் என்றுதான் சொல்லுவார்கள். ஆனால், சாஸ்திரம் ஒரு உபசாரம்; அதைவிட அடி வலுவாயிருப்பது, வழக்கத்தினால் ஏற்பட்ட ஓர் மனோபாவந்தான். தீண்டாமை போய்விடுமானால், பண்ணை நடக்குமா? நெல்லு முளைக்குமா? அறுவடை ஆகுமா? உலகம்தான் சுழலுமா? இப்படியெல்லாம் கட்சி பேசுவோரைக் கிராமத்திலே நீங்கள் காணலாம். இந்தக் கட்சி, சாஸ்திரத்துக்குப் பக்க பலம் என்று நினைக்க வேண்டாம். இந்தக் கட்சிக்குத்தான் சாஸ்திரம் பக்க பலம். மனோபாவம் மாறிவிட்ட விஷயங்களில் சாஸ்திரத்தை இந்த மனிதர்கள் தாராளமாய் மீறியிருக்கிறார்கள். தீண்டாமை போனாலும் சொகுசாய்ச் சுகவாழ்க்கை நடைபெறும் என்ற உறுதியைப் பலமாய் இவர்கள் மனத்தில் பதியவைக்க முடியுமானால் இவர்கள் அபிப்பிராயம் மாறுவதற்கு இடமுண்டு.

குடும்ப வாழ்க்கை, வியாபாரம், நாடக மேடை, இலக்கியம் முதலிய சகலமானவற்றிலும் நமக்கு வழக்கத்தின் பிடிப்பு மிகப் பலமாய்த்தான் இருக்கிறது. புதிய சாமானைத் தைரியமாய்ச் சிருட்டித்து, அதற்கு 'மார்க்கட்' தேடுவது அநேக மேனாட்டு வியாபாரிகளுக்கு வழக்கமாயிருக்கிறது. புதிய சாமானில் ருசி ஏற்படுத்திவிடலாமென்பது அவர்கள் தைரியம். நமது வியாபாரிகள் இப்படியில்லை. வாழ்க்கையைச் சீர் பெறச் செய்யும் புதிய நாடகங்கள் வேண்டுமென்றால், ஆம் என்று தலையை அசைப்போர் ரொம்ப உண்டு. ஆனால், தொழில் செய்யும் நடிகர் புதிய வழியைக் கைக் கொள்ள அஞ்சுகிறார்கள். அவர்கள் போகட்டும் என்றால், தொழிலாய் வைத்துக் கொள்ளாமல் நாடகக் கலையில் பிரியத்தால் நடிக்கும் 'அமெச்சூர்'கள்கூடப் பாட்டு, ஸ்வரம் போட்ட பேச்சு, கோர அபிநயம் இவைகளை விட்டுச் சற்றுத் தைரியமாய்ப் புதுமாதிரி நடிக்கலாகாதோ? கிடையாது. பண நஷ்டம் வந்துவிடுமோ என்ற பயத்துக்கு ஆளாகிறார்கள். புதிசு புதிசாகக் கிளம்பும் 'டாக்கீஸ்'களும் இதே மாதிரிதான்.

என்ன சொன்னாலும் சரி, என்ன எழுதினாலும் சரி, மாறுதலடைய முடியாது என்ற பிடிவாதமாய் நிற்பது, பழக்கம் என்ற நோயின் கோளாறுதான். மாறுதல் என்றால் நஷ்டம் என்ற எண்ணமேதான் முன்னிற்க வேண்டுமா? "முற்போக்கு" என்ற தைரியம் உண்டாகக் கூடாதோ? மாறுதல் இல்லை என்றால் முற்போக்கு என்பது கிடையவே கிடையாது. என்னவானாலும் வழக்கத்தைக் குரங்குப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பதற்கு "முன்னுக்கு வரமாட்டேன்" என்றுதான் அர்த்தம். இது அறிவுடைமை யாகுமோ?

கதரை அணியுங்கள்

திகில் (தானப்பன் எழுதியது)

ராத்ரி முழுவதும் கோபாலனுக்கு அதே நினைவுதான். "பிசாசுக்குக் கால் இராதென்று வெங்கிட்டு சொன்னனே. அது நம்மூர் அரசமரத்துலேகூட இருக்குமாமே.நாம் அங்கே போரத்தே அது அடிச்சுட்டா ?—" என்று தனக்குள்ளேயே பேசிக்கொண்டு தன் பக்கத்திலிருந்த தாயாருடன் ஒண்டித் தன் உடம்பைப் பயத்தினல் முடக்கிக் கொண்டு படுத்தான். அன்று முழுவதும் பிசாசுக் கனவுதான். திடீர் திடீரென்று தூக்கிப் போட்டாற்போல் எழுந்திருந்து வீறிட்டுக் கத்தினன். மதுரமும் அன்றிரவு மிகக் கவலையுடன், தூங்காமல், தன் மகனைச் சமாதானப்படுத்தினள். பொழுது விடிந்ததும் அடுத்த வீட்டுப் பாட்டியைக் கொண்டு விபூதி மந்திரித்துக் குழந்தைக்குக் கொடுத்தாள். நாட்கள் பல சென்றன. கோபாலனும் அவ்வூர் அரச மரத்தினிடம் மிகுந்த மரியாதை வைத்து அவ்விடம் போகாமல் இருந்தான்.

* * *

பில்லூர்க் காளியம்மாள் உத்ஸவம் வெகு நன்ருயிருக்கும். காளியம்மன் கோவிலுக்கு அக்கிரஹாரத்திலிருந்து போகிறவர் அரசமரத்தைத் தாண்டித்தான் செல்லவேண்டும். அப்பா அங்கு அழைத்துப்போக நாழியாய் விடும். அதற்குள் அங்கு பாதிவேடிக்கை ஆகிவிடும். ஆகையால் தானே போய்விட வேண்டுமென்ற எண்ணம் கோபாலுவுக்கு உதித்தது. வடக்குத் திக்கிலிருந்து கிளம்பிக்கொண்டிருந்த தமுக்கின் ஒலி அவன் ஆவலை அதிகரித்தது. தன் ஆவலின் வேகத்தில், தான் போகும் வழியில் அரசமரம் இருக்கிறது என்பதை மறந்துவிட்டான். சாயங்காலம். ஆறரை மணி. பாதி இருட்டு. ஆங்காங்கு கரிய வானின் கண் விண்மீன்கள் ஒளிர்ந்துகொண்டிருந்தன. சிவராமய்யர் புழக்கடையில் ஆள்களுக்குக் கூலி கொடுத்துக் கொண்டிருந்தார்.மதுரம் கோபாலனைச் சமயலறைக்குக் காவல் வைத்துவிட்டுப் பால் கறக்கக் கொட்டிலுக்குச் சென்றுவிட்டாள். கோபாலு சுற்றுமுற்றும் பார்த்தான். மெதுவாகப் பூனை நடப்பதுபோல் வாசல் கொரட்டுக்கு வந்தான். தெருவில் ஒருவரும் இல்லை. ஒரே குதிதான். அப்புறம் ஓட்டம். ஆச்சு! மேலத்தெருத் தாண்டியாய்விட்டது. அரசமரம்! பாழும் அரசமரமே! கோபாலுவின் மனக் கண்முன் வெங்குட்டுவின் வார்த்தைகள் மின்னல் போல் தோன்றின. "ஆம்! அதுதான்! வெள்ளையா யிருக்கிறதே ! என்னைப் பார்த்து முழிக்கிறதே! கையை அதோ நீட்டுகிறதே! அது என்னைத் தொரத்துகிறதே!" சலசல என்ற சத்தம்! அவன் திடுக்கிட்டான். அவன் உள்ளத்தில், திகில்! அச்சம்!! பீதி!!!, அவன் தேகம் மயிர்க்கூச்செறிந்தது. 'ஓ'வென் றலறிக்கொண்டு அவன் திரும்பி ஓடினன். தான் பார்த்தது அரசமரத்தின் கிளையையே என்று அவனுக்கு எப்படித் தெரியும்? தான் கேட்ட சத்தம் இலைகளின் சலனத்தினல்தான் என்று வெருண்ட அக்குழந்தையின் மூளைக்கு எட்டுவதெப்படி ? தனக்கு வெங்குட்டு பிசாசைப்பற்றிச் சொல்லி யிருப்பது பொய்யென்று அப்பாலனுக்குத் தெரிவது எங்ஙனம் ?

* * *

மதுரம் பாலைக் கறந்துகொண்டு உள்ளே வந்தாள். குழந்தையைக் காணோம். பொத்தென்று சொம்பை வைத்தாள். வேகமாக வாசலுக்கு வந்தாள். யாரோ குழந்தை அலறிக் கொண்டு வரும் சத்தம்! நிதானித்தாள். ஆம்! அது கோபாலுவின் சத்தமே! அவள் உடம்பில் அடக்கவொண்ணப் பர பரப்பு. மேலத் தெருவை நோக்கி விரைந்தாள். 'ஓ' வென்று அலறிக்கொண்டு பின்னே பாராமல் கோபாலு ஓடிவருகிறன். அவன் உடம்பு முழுவதும் வேர்வை. அவன் மார்பு படபடவென்று அடித்துக்கொள்கிறது. மதுரம் ஓடினள். குழந்தையை அப்படியே வாரி எடுத்துக்கொண்டாள். தன் மைந்தன் நிலையைக்கண்டு அவள் வயிறு எரிந்தது. "என்னடா, என் கண்ணே!" என்றாள். கோபாலு விம்மி அழுகிறன். தன் கையைப் பின்புறம் சுட்டுகிறன். "அம்மா" என்கிறன். மறுபடி விம்மல்! அழுகை! இதற்குள் ஒரே கூட்டம். ஒன்றும் கடித்ததாகவும் தெரியவில்லை. எல்லோரும் 'பயந்துகொண்டான்' என்ற முடிவுக்கு வந்தார்கள். காரணம் மட்டும் தெரியவில்லை.

* * *

கோபாலனுக்கு மறுநாள் நல்ல சுரம் கண்டுவிட்டது. குழந்தை கண் விழிக்கவில்லை. பூசாரி வீரப்பன் காளியம்மனுக்குப் பூசை போடவென்று அரை ரூபாய் வாங்கிப்போய்க் கள்ளைக் கொண்டு வயிற்றுக்குப் பூசைசெய்து உலக சிந்தனையற்றுன். பரியாரிச் சின்னன் வெல்லப் பாகில் எதையோ கலந்து நல்ல லேகியம் என்று சொல்லிப் பத்து ரூபாய் வாங்கிச்சென்றன். எவ்வளவு கொடுத்தும் பிரயோஜனம் என்ன ? கோபாலன் பயத்தினல் ஏற்பட்ட அதிர்ச்சியின் (Shock) காரணமாகத்தான் இறந்தான் என்று யாருக்குத்தெரியும் ? யாருக்குத் தெரிகிறது ? ஆ! அன்று வெங்கிட்டு சொன்ன கட்டுக் கதை கோபாலனுக்கு எமனகை வாய்த்ததே! தமிழ் மக்கள் இன்னமும் பிசாசுக் கதைகள் குழந்தைகளுக்குச் சொல்வதை நிறுத்தவில்லையே! 'அந்த மரத்திலே' பேய் இருக்கிறதென்றும் 'இந்தக் குளத்தில்' பிசாசு இருக்கிறதென்றும், முனி அடிக்குமென்றும், பிரமராக்ஷஸ் பிடிக்குமென்றும் சொல்வதைக் கேட்டு அல்லவோ இவர்கள் மடமையை எண்ணி 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்று ஏங்கினர் நமது கவி.

மகாத்மா காந்தி எழுதியவை

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0
நீதி தர்மம்	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம்	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	2	0	0

அட மழையே!

(சிட்டி எழுதியது)

ஒரு நாள் மாலை திடீரென்று, இவ்வுலகத்தில் ஒரு நல்லவன் இருக்கிறானென்று எனக்குத் தெரிந்தது. காரணம் வெளியில் பெரும் மழை. "நல்லாரொருவ ருளரேல்" என்ற செய்யுள் அடி ஞாபகம் வந்ததும் உண்மை புரிந்தது. ஆனால் இந்த நல்ல ஆசாமியினால் என் பாடுதான் திண்டாட்டமாய் விட்டது. வீட்டிலிருந்த ஒரே தாழங் குடையை என் மாமா எடுத்துக் கொண்டு போய்விட்டார். நான் வெளியில் போக முடியவில்லை. உலகத்தில் ஒரு நல்லவனிருக்கும் போதே இவ்வளவு திண்டாட்டம் நேரிடும்போது, எல்லோரும் நல் வழியில் நடக்க வேண்டுமென்று சொல்லும் மேதாவிகளை என்னதான் செய்வது! கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். ஒரு நல்லவனுக்காகப் பெரும் மழையென்றால் உலகம் பூராவும் நல்லவர்கள் நிறைந்து விட்டால்...............? ஏன், பிரளயம் தான்.

நிற்க, மழைதான் வந்துவிட்டது. பூராவும் பெய்து தொலையட்டுமே என்றால் விடுகிறதா? கிடையாது. திடீரென நின்றுவிடும். உடனே நீங்கள் கடைக்குப்போய் நெய் வாங்கிக் கொண்டு வருவீர்கள். ஏதோ சிறு விஷய மொன்றை மறந்து விட்டது போல் மழை மீண்டும் வந்துவிடும். இப்படிச் சந்தேகத்திற்குச் சாம்பார் கேட்கும் மழையினால்தான் நமக்குத் தலையில் துணி போட்டுக்கொண்டு போகும் காலம் வந்துவிடுகிறது. வீட்டில் குடையிருந்தால் யாராவது வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். அப்படியில்லாமல் குடைதான் கையிலிருக்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். வீண் சுமைதான். மழை வருமென்று எதிர்பார்த்துக் குடை எடுத்துக் கொண்டு புறப்பட்டோமோ, அன்று முழுவதும் வைராக்கியத்துடன் வெய்யில் காயும். தரும புத்திரருக்குக்கூட இச்சந்தர்ப்பத்தில் கோபம் வருவது இயற்கைதான். ஆனால் அக்காலத்தில் கொடை பூராவும் கர்ணனிடத்தில் தான் இருந்தது. எல்லாக் குடைகளையும் கர்ணனே வைத்துக்கொண்டால் பாரத யுத்தம் நேர்வது நியாயம் தானே. ஆகையால்.......... அடடா! குடையையும் கொடையையும் சேர்த்தல்லவா பேசிவிட்டேன்! எல்லாம் எல்லாம் உங்களால்தான் வருவது. ஏன் இரண்டு வார்த்தைகளையும் ஒரே மாதிரி உச்சரிக்கிறீர்கள்?

மழை வந்தால் இம்மாதிரி—குடையில்லாத அல்லது இழந்த—நமக்குக் கஷ்டமாயிருகிறது. இதற்காக நாம் மழையை நொந்துகொள்வது அழகாகுமா? மழையினால் எவ்வளவு பேருக்கு நன்மையும் சந்தோஷமும் உண்டாகிறது? தெரிந்தவர்கள் கை தூக்குங்கள் பார்க்கலாம். ஏது எல்லோரும் கை தூக்கிவிட்டீர்கள்? ஓஹோ! சரிதான். அப்படியா நினைக்கிறீர்கள். எல்லாரும் தப்பு. மழையினால் நன்மையடைபவர்கள் நிலச் சொந்தக்காரர்களென்றல்லவா கூறுகிறீர்கள். உங்களுக்கு 'மார்க்கு' பூஜ்யம்தான். உங்களெல்லோரையும் பப்ளிக் சர்விஸ் கமிஷன் பரீக்ஷைக்கு அனுப்பினால் என்னதான் எழுதுவீர்களோ! உண்மை விடை யென்ன தெரியுமா? என் தம்பி ராமுதான். ஆம் அவனும் அவனுடைய நண்பர்களும்தான் மழையினால் சந்தோஷ மடைகிறார்கள். என்ன சார், வாசகரே, நீங்கள் விழித்துப் பார்ப்பதைப் பார்த்தால் என்னை அடித்துவிடுவீர் போலிருக்கிறதே! என்னை நம்பமாட்டேனென்கிறீர். சரி, வாசல் திண்ணையில் போய்ப்பாரும்.

பார்த்தீரா ராமுவை? என்னுடைய புது நோட் புஸ்தகத்திலிருந்து காகிதங்களைக் கிழித்து அவன் கப்பல் செய்து விடுவதைப் பார்த்த பிறகாவது நான் சொல்லியதின் உண்மை தெரிகிறதா? ராமுவுக்கு எப்பொழுதும் மழை வந்துகொண்டிருந்தால் போதும். நல்ல நோட்டுப் புஸ்தகங்களாக அரை டஜன் அவன் கையில் கொடுத்துவிடுங்கள். பிறகு ராமுவைப் போல் நல்லவனுண்டா என்று சொல்லுவீர்கள். ஒரு வேளை அவனுடைய நல்ல தன்மைக்காகத்தான் இப்பொழும் மழை வருகிறதோ என்னமோ. அப்படியிருந்தால் ராமுவுக்குத் துட்டுக் கொடுத்தாவது அவனைக் கெட்டவனாக்கிவிட வேண்டும். இந்தக் கப்பல் விஷயம் ஒரு பக்கம் இருக்கட்டும்.

மழை நின்றபாடில்லையே. அது கொட்டும் சப்தத்தில் உங்களுக்கு உரக்கச் சொல்ல முடியாமல்தான் இதை எழுதித் தொலைக்கிறேன். கலீலியோ, நியூடன் முதலிய பெரும் விஞ்ஞானிகள் மனதில் தோன்றிய பெரும் கேள்விகள் போல என் மனதிலும் ஒன்று தோன்றுகிறது. அதாவது 'என் மழை பெய்யவேண்டும்?' என்பதே. கொஞ்சம் பொறுங்கள். கேள்விதான் என் மனதில் தோன்றி யிருக்கிறதேயன்றி நான் இன்னும் விடை கண்டு பிடிக்கவில்லை. அதற்குள் நோபல் வெகுமதியும், மெடல்களும், உபசாரப் பத்திரங்களும் கொடுத்துவிடாதீர்கள். மழையின் காரணம் என்ன தெரியுமா? மழை பெய்கிறது. எங்கே? ஆகாயத்திற்குமேல். இந்த நீல நிறமான கூரை இருக்கிறதே, அதற்குத்தான் ஆகாயம் என்று பெயர். இது ரொம்ப நாள்

பட்ட கூரையாதலால் அதற்குமேல் மழை பெய்யும்போது இதன் வழியாய் ஒழுக வாரம்பிக்கிறது. இந்த ஒழுக்கையே மழையென்று நாம் கூறுகிறோம். இன்னும் நிஜமான மழையைப் பார்த்து விட்டால் என்னவாகுமோ! ஆனால் "நீ பார்த்திருக்கிறாயா?" என்று கேட்டுவிடாதீர்கள். அதைப் பார்த்து இப்பொழுது என்ன? புண்ணியமா புருஷார்த்தமா?

சரி நீங்கள் சொல்லுகிறபடி கடல் நீர் மேகமாக மாறி மழையாகப் பெய்கிறதென்றே வைத்துக்கொள்வோம். இது உண்மையானால் இந்த வாழ்க்கை வீண் என்பதைச் சந்நியாசிகளோடு சேர்த்து ஒப்புக்கொள்ள நான் தயார். கடல் நீர் மேகமாகி மழையாகத்தான் ஆகிறதே; மீண்டும் எதற்காக அம்மாதிரி செய்கிறது? இதில் ஏதாவது முறை ஒழுங்கு முதலியன இருக்கின்றனவா பாருங்கள். பின்னே என்ன மழை வேண்டிருக்கு சார்? சினிமாவுக்குப் போவதற்கு இன்னும் பத்து நிமிஷங்கள்தானிருக்கின்றன. இது நிற்பேனா என்கிறதே. இந்த லக்ஷணத்தில் மாதம் மும்மாரி வேண்டுமாம். இப்பொழுதுதான் மணிக்கு மூன்று மழை பெய்கிறதே. வீட்டில் இருக்கும்போதே இவ்வளவு கஷ்டம். இன்னும் வெளியில் போய்விட்டால் மோட்டார் சக்கரம் அள்ளியடிக்கும் மழை நீரும் மண்ணும்...............அதையேன் கேட்கிறீர்கள். சொல்லிச் சாத்தியமில்லை. அநுபவித்தால்தால்தான் தெரியும்.

அடே! மாமா வந்துவிட்டாரே. அவர் கையில் பாதிக்குடைதான் இருக்கிறது. வேஷ்டியெல்லாம் நனைந்து போய்விட்டது. அவர் என்ன சொல்லுகிறார் கேளுங்கள்:

"அம்மாடி. இந்த மாதிரியா இன்னும் ஒரு வாரம் மழையடிச்சா நாற்று நட்டுவிடலாம்" என்கிறார்.

நாற்று நாசமாய்ப் போகட்டும். இன்னும் ஒரு நாள் இம்மாதிரி மழை பெய்தால் உலகத்திலிருக்கிற நல்லவர்களையெல்லாம் கொலை செய்துவிடப் போகிறேன். அப்புறம் இந்த மழை கிட்ட வருகிறதா என்று பார்ப்போம்.

மகாத்மா காந்தி எழுதிய

ஆரோக்கிய வழி

விலை அணா 4

அன்பு விநியோகம்

சங்கீதக் கச்சேரியில், ரஸிகர்கள் "பேஷ்" போடுவது, வித்வானுக்கு உத்ஸாகத்தைக் கொடுக்கிறது. பிரசங்க காலத்தில், மனிதர்கள் "புளி மூட்டைகள்" மாதிரி, அசைவற்று உட்கார்ந்திருப்பார்களாகில், பிரசங்கிக்கு உயிரே இராது. உயிரே, பரஸ்பரத் தூண்டுதலால்தான் மிளிரும்; ஒளிபெறும்; ஆவேசமடைந்து, மகத்தான கருமங்களில் ஈடுபடமுடியும்.

ஹனுமான் ஜாம்பவான் கதை உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். சீதாப் பிராட்டியைத் தேடிச் சென்ற ஹனுமான், பரந்த கடலைக் கண்டு திகைத்துப் போனார். கடலையாவது கடக்கவாவது என்ற ஏக்கம் அவருக்கு உண்டாயிற்று. பக்கத்திலிருந்த ஜாம்பவானுக்குச் சக்தி வளரும் மர்மம் தெரியும். இயற்கை வீரனான ஹனுமானுக்கு ஒரு அளவு செயற்கைத் தூண்டுதல் வேண்டும் என்று ஜாம்பவானுக்குப் பட்டது. ஹனுமானைத் தேற்றினார். ஹனுமானும் உடனே அளவிலா உத்ஸாகம் கொண்டார். இது மனோலோகத்தில் காணப்படும் ஒரு சட்டமாகும், விதியாகும்.

இந்தச் சட்டத்தை மறந்ததால், நாம் எல்லோரும் உத்ஸாகமின்றி வாழ்கின்றோம். இந்தச் சட்டத்தின் தேவையை உணராமல், நாம் வளர்ச்சி குன்றிப் போனோம். இந்தத் தவறை நாம் திருத்திக் கொண்டால், நம்மவர்களுக்கு எவ்வளவோ சாதகம் ஏற்படும். காலத்தில் செய்த உதவிபோல, அது பெரிய பெரிய காரியங்களுக்கு ஊக்கத்தை அளிக்கும். தூள் தூளாகச் சிதறிக் கிடக்கும் மனிதர்களை ஒன்று சேர்த்து வல்லமையை வளர்க்கும் காந்த சக்தி இதற்கு அபரிதமாய் உண்டு. பக்கத்தில் காணும் மேல்நாட்டு ஆசிரியர் மில்லர் சொல்லுவதைக் கவனியுங்கள்.

—வ. ரா.

"உங்கள் ஹிருதயம் ஒரு அழகான பெட்டி. அதில் அன்பு என்ற வஸ்து ஏராளமாக இருக்கின்றது. ஆனால் அதை இறுக்கிப் பூட்டி வைத்திருக்கிறீர்கள். அதை எடுத்து நண்பர்களுக்கு விநியோகம் செய்யலாகாதா? நண்பர்களின் மரணகாலம் வரையில் சும்மாயிருக்கலாமென்றீர்களோ? அவர்கள் உயிரோடிருக்கும்போதே அவர்களிடம் அன்பு சொரிந்து இன்பமூட்டினால் ஏதும் குறைந்துவிடாது. அவர்களுடைய காதுகளுக்கு உயிருள்ள காலத்திலேயே அவர்களை ஆமோதித்துப் பேசுங்கள். அவர்கள் போன பின்பு பேசுவதைவிட, அவர்கள் முன்னிலையிலேயே பேசுவதுதான் சிலாக்கியம்.

"அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் ஒரு அழகான கட்டுரை எழுதியிருக்கிறார். உங்களுக்கு அது ரொம்பப் பிடித்தமாயிருக்கிறது. அவருக்கு உமது அபிப்பிராயத்தையும் நன்றியையும் தெரிவித்தால், அவருக்கு என்ன உத்ஸாகம் ஏற்படும், தெரியுமா? அடுத்த வாரத்தில் இன்னும் அழகான கட்டுரையொன்றை எழுதுவதற்கு அவருக்கு ஊக்கமேற்படும். நீங்கள் ஒரு புத்தகம் படிக்கிறீர்கள். படித்தது உங்களுக்கு மிக்க உபயோகமென்று படுகிறது. அந்த அறிவைச் சேகரித்துக்கொண்ட பின்பு அதைத் தந்த ஆசிரியனுக்கு நன்றி காட்டும் கடுதாசி ஒன்றை எழுதுவது அவசியமல்லவா?"

—ஜே. ஆர். மில்லர்.

சித்திரக் கண் காட்சி

(சங்கு. ஸுப்ரஹ்மணியன்)

தேசத்தில் கவிதைக்கு ஒரு ஸ்தானம் கொடுத்திருப்பதேபோல ஓவியத்துக்கும் ஓர் கவுரவமான இடம் தருவது நமது கடமை. ஒரு கவிஞன் பாடுகின்றான்; அவனது கவிதை புதிய மதத்தைச் சிருஷ்டித்து விடுகிறது; அல்லது சமூகத்தைக் கிளறி விடுகிறது; அல்லது ராஜீய வாழ்விலேயே ஓர் புரட்சியை யுண்டாக்கி விடுகிறது. அத்தனை சக்தி ஓவியனுக்கும் சிற்பிக்கும் இருப்பதாக உலக இதிகாஸம் கூறுகின்றது. இன்றைய தினம் வரை நமது மக்களிடம் சமயப்பற்றுதலையும் சமூக ஒற்றுமையையும் காத்து வருவதற்கு, கோயில்களையும் விக்ரகங்களையும் வகுத்த சிற்பிகளும் சித்திரக்காரர்களும் ஓரளவு காரணஸ்தர்கள் என்பது உறுதி. மேனாடுகளில் இன்றைக்கு ராஜீய எண்ணங்களைப் பிரசாரம் செய்வதற்கு சித்திரக்காரர்களும் 'கார்ட்டூன்' வரைபவர்களும் எவ்வளவு உபயோகப் படுகிறார்களென்பதை நாமும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். தேசத்தின் எல்லாத் துறையிலும் உணர்ச்சி ஊட்டக்கூடிய ஒரு அந்தர் சக்தி சித்திரத்துக்கும் சிற்பத்துக்கும் இருக்கிறது என்று ஏற்படுகிறது. மனித ஹிருதயத்தைத் தொடுகின்ற ஆற்றல் கவிதைக்கும் ஓவியத்துக்கும் சிற்பத்துக்கும் தான் உண்டு. வெறும் கலைச்சுவை மட்டுமின்றி மக்களின் எழுச்சிக்கும் உபயோகப்படக் கூடியது ஓவியம் என்பதை எடுத்துக் காட்டவே இவ்வளவு எழுத வேண்டியதாயிற்று.

முன்னொரு சமயம் சென்னைச் சித்திரக் கலாசாலையினர் நடத்திய கண் காட்சியைவிட மிகமிகச் சிறந்த ஓவிய விருந்தொன்று சென்ற வாரத்தில் சென்னையில் நடைபெற்றது. பல மாகாணங்களினின்றும் ஓவியர்கள் சென்னைச் சித்திரக் கண் காட்சிக்குத் தங்கள் வன்மையைக் காட்டும் படங்களை அனுப்பியிருந்தார்கள். சென்னையில் நடக்கும் இந்தக் கண் காட்சியில் தென்னிந்தியரின் வேலைப்பாடு அதிகமாக வந்திருக்கக்கூடும் என்று நினைப்பது சகஜம். ஆனால் அவ்வாறில்லாதது வருந்தத்தக்கதே. தமிழர், தெலுங்கர், மலையாளத்தார், கருநாடியர் முதலிய தென்னிந்திய ஓவியர்களின் வன்மையைக் காட்டுவதற்கு அங்கு 80க்குமேல் சித்திரங்களில்லை. நானூற்றுக்கு அதிகமான சித்திரங்களிருந்த சென்னைக் காட்சியில் ஐந்திலொரு பங்கைத்தானா தென்னிந்தியர் தந்திருக்கவேண்டும்? தென்னாட்டில் ஓவியக்கலை ஓய்ந்து கிடக்கின்றது என்பதற்கு இது ஒரு அறிகுறி. ஸ்ரீயுத ராமராவ், ஸ்ரீ மாதவ மேனன், ஸ்ரீ தணிகாசலம் முதலியவர்களின் 20 சித்திரங்களும் இல்லாவிட்டால் தென்னிந்தியரின் பிரதிநிதித்துவம் இன்னும் அடியோடு விழுந்து போயிருக்கும்.

எத்தனை நாளைக்குத் தென்னிந்தியாவில் ஓவிய வன்மை தூங்கிக்கொண்டிருப்பது? இத்தகைய நிலைமைக்குக் காரணம் இன்னவென்பது நமக்குத் தெரியாமற் போகவில்லை. சிறு வயதினின்றே சிரத்தை காட்டினவனுக்குத்தான் ஓவியம், தாய் மொழி, தேச வலிமை முதலியவைகளில் திறமை ஏற்படும். நமது பள்ளிக்கூடங்களில் ஒதுக்கி வைக்கப்பட்ட உபாத்தியாயர்களெனத் தமிழ்ப் பண்டிதரும், டிராயிங் வாத்யாரும், டிரில் மாஸ்டரும் இருக்கும் வரை, இளைஞர்களுக்கு இந்த விஷயங்களில் சிரத்தை எவ்வாறு ஊறும்? நிகழ் காலத்தில் ஓவியக் கலையில் இளைஞர்களுக்கு ஊக்கம் இல்லை. ஒழுங்காக ஓவியத்தை ரஸிக்கும் கண்களும் தென்னாட்டில் இன்றைக்குக் குறைவாய்த்தானிருக்கிறது. ஆகவே ஓவியர்களும் தொகையில் குறைவாயிருக்கின்றனர். தாய்மொழியிடத்திலும், தாய்நாட்டுக் கலையாகிய சித்திரத்திலும் நம்மவருக்குச் சிரத்தை ஏற்படாவிடில் 'மறுமலர்ச்சி' என்ற வார்த்தையைப் பற்றிப் பேசுவதற்குக் கூட நம்மவருக்கு வாய் கிடையாது என்றே சொல்லவேண்டும். அன்று சென்னைச் சித்திரக் கண்காட்சியைச் சுற்றிப்பார்க்கும்போது இந்த எண்ணங்களெல்லாம் நமக்கு ஏற்பட்டன. இனி, காட்சி விமரிசனத்தி லிறங்குவோம்.

'எண்ணைச் சித்திரம்' என்பது ஓர் வகை ஓவியம். இந்தக் கண் காட்சியில் அந்த வகைச் சித்திரங்களுக்கு நல்ல இடம் தரப்பட்டிருந்தது. வர்ணங்களை ஏராளமாக அள்ளித் தெளிக்கப்பட்டிருந்த படங்களைவிட நாஸூக்காகவும் மேன்மையாகவும் தீட்டப்பட்டிருந்த சித்திரங்களே மிக்க எழிலோடு இலங்கின. 'காஷ்மீர ஏரி'யினருகே உட்கார்ந்து தான் கண்ட காட்சியைக் கித்தானிலெழுதி ஓர் ஓவியன் அனுப்பியிருந்தான். அதை ஊன்றிக் கவனித்த போது சில நிமிஷங்கள் மனம் காஷ்மீர யாத்திரை சென்று வருகின்றது. அவ்வளவு தத்ரூபம் அந்தப் படம்! ஸ்ரீ. எஸ். என். ஸ்வாமி என்ற தமிழன் எழுதி வைத்திருந்த 'பாடம்', 'அழகி' என்ற படங்களும் ரஸிகர் மனதைக் கவர்வன. அந்த அழகி அமர்ந்திருந்த ஜமுக்காளத்தின் வர்ணக் கோடுகளைக் காட்டி வெகு பொருத்தமாக வர்ணப் பிரயோகம் செய்யப்பட்டிருந்தது ஓவியனின் கை வரிசைக்குப் புகழ் ஊட்டிற்று. தமிழ் நாட்டில் வயல்களுக்குத் தண்ணீரடிக்கும் 'கவலை' யந்திரத்தின் காட்சியை அப்படியே பார்த்து எழுதி மற்றோர் ஓவியன் அனுப்பியிருந்தான். அதுவும் அழகாய்த்தானிருந்தது.

கவிஞனைப்போல ஓவியனும் "காக்கை குருவி எங்கள் ஜாதி" என நினைப்பவன். 'தின்ன வரும் புலி தன்னையும் அன்போடு சிந்தையில்' எண்ணிவிடுவான் சித்திரக்காரன். மிருகங்களையும் பட்சிகளையும் பற்றி எழுதப் பட்டிருந்த படங்களுக்காக இந்தக் காட்சியில் ஓர் பிரத்தியேக இடம் தரப்பட்டிருந்தது. நமது நண்பர் காளி கிங்கர் கோஷ், தட்டாத்திப் பூச்சிகளை வேட்டையாடும் ஒரு குருவியையும், மான்கள்மீது பாயும் ஓர் புலியையும் சித்தரித்து வைத்திருந்தார். அடுத்தாற்போல, சாந்த மயமான மிருகங்களையும் பட்சிகளையும் இதர ஓவியர்கள் எழுதி வைத்திருந்தனர். 'முயல்கள்' பேசிக் கொண்டிருந்தன. 'கோழி' குந்தியிருந்தது. மத்தியான வேளையில் ஒரு காக்கை ஓய்வெடுத்துக் கொள்வதே போல ஓர் சித்திரத்தை எழுதிவைத்துவிட்டு நண்பர் விசுவமோகன் ஒரு ஐம்பது ரூபா பரிசையும் தட்டிக்கொண்டு போய்விட்டார். இந்தப் பகுதியைக் காணும்போது ஓவிய ஞானி எந்தப் பட்சியையும் தாழ்வென்று தள்ளுவதில்லை; எந்த மிருகத்தின் கோர

கிருத்தியத்தையும் படம் எழுதுவது கடினமென அவன் தயங்குவதுமில்லை என்பது தெரியவந்தது.

சித்திரத்தில் 'பாஸ்டல் வேலை' என்று ஓர் வகை வேலைப்பாடு. வர்ணப் பென்ஸில்களைப் போன்றவை பாஸ்டல் ஸ்டிக்குகளும்; மெழுகு போன்ற வர்ணச் சரக்கு அக் குச்சியி லுண்டு. பாஸ்டல் சித்திரத்தில் வரிகள் கீற்றுக் கீற்றாய்க் கண்ணை உறுத்தா. எண்ணெய்ச் சித்திரங்களில் இருப்பதுபோல வர்ணம் திட்டுத் திட்டாயும் தென்படாது. மேலெழ மெழுகினற்போல வர்ண விஸ்தாரம் வெகு ரஸமாயிருக்கும். இந்தக் கண் காட்சியிலேயே முதற்பரிசைப் பெற்றுவிட்ட 'சுண்ணாம்புக் காளவாய்' என்ற படம் பாஸ்டல் வேலைப்பாட்டில் ஒன்றாகும். மிஸ்டர் மக்கி என்பவருடைய சிருட்டி அந்தப் படம். இந்த வரிசையில் 'நண்பர்கள்' என்ற தலைப்புடன் எழுதி வைக்கப்பட்டிருந்த படமும் அநேகர் கவனத்தைக் கவர்ந்தது. ஓர் பறவைக் குஞ்சோடு ஒரு ஏழைப்பிள்ளை உறவாடிக் கொண்டிருப்பது போல சித்திரிக்கப்பட்டிருந்தது அந்தப் படம்.

உருவத்தை அப்படியே எழுதி விடலாம். வர்ணங்களையும் அள்ளிக்கொட்டி விடலாம். ஆனால் எண்ணத்தை உருவத்தோடு இணைத்து எழுதுவது லேசான காரியமல்ல. 'வெறுப்பு' என்று ஓர் படத்தை மிஸ்டர் திம்மய்யா அனுப்பியிருந்தார். அந்தப் படத்தின் வரிகளைக் கூடார்த்தப் படமெழுதுபவர்களும் (Cartoonist) கிரகித்துக் கொள்ள வேண்டுமென்று நமக்குப்பட்டது.

சென்னைச் சித்திரக் கலாசாலை விமரிசனத்தைப் பற்றி எழுதியபோது 'நமாஸ்' என்ற படத்தைப்பற்றிப் குறிப்பிட்டிருந்தோம். அடுத்த பகுதியிலிருந்த சித்திரங்களில் முதன்மை ஸ்தானம் வகித்தது அந்த 'நமாஸ்'தான். சென்னைச் சித்திரக் கலாசாலை அத்தியட்சகரான ஸ்ரீயுத ராய் செளத்திரியின் வேலைப்பாட்டுக்கு இனிமேலா நாம் நற்சாட்சிப் பத்திரம் தரப்போகிறோம்! அந்தப் பகுதியில் இருந்த பறைச்சேரி, புல்வெட்டிகள், மார்க்கட்டு, கோயில் வாசல், பழ வியாபாரி முதலிய காட்சிப்படங்களும் ரஸனைக்கு ஏற்றனவே.

மிருகங்களையும் கதைகளையும் எழுதுவதைவிடக் கடலையும் மலையையும் காட்டி இயற்கைக் காட்சிகளை எழுதுவதில் ஓவியர்களுக்கு ஓர் தனிப்பித்தம் உண்டு. இயற்கைக் காட்சிகள் என்ற இந்தப் பகுதியில் மட்டும் 75க்கு மேற்பட்ட படங்கள் இருந்தன. அருணோதயம் முதல் அந்திச் செவ்வானம் வரை சகல காலத்தின் தோற்றங்களும் இருந்தன. ஹிமாலயத் தோற்றம் ஓர் படம்; கன்னியாகுமரி ஒரு சித்திரம்; சென்னைக் கூவம் நதிக் காட்சியைக்கூட ஒரு ஓவியன் காட்டியிருந்தான்; அநேக ஊர்களின் காட்சிகளை இந்த ஒரு பகுதியிலேயே நாம் கண்டோம். வர்ணங்களோடு ஓவியன் எவ்வாறு விளையாடக் கூடுமென்பதை இந்தப் பகுதி வெகு தெளிவாகக் காட்டிற்று. 'எத்தனை கலவை! என்னடா இந்த வண்ணத்தியல்புகள்!' என்று தோன்றிற்று.

'ஞானியின் பெருமையைப் பாடுவான் கவி' என்றது ஓர் வடமொழி சுலோகம். அதே மாதிரி நமது ஆதி காலச் சிற்பிகளின் புகழை எடுத்துப் பறை சாற்றுவதில் தற்கால ஓவியனுக்கு ஓர் ஆசையுண்டு. இந்தக் காட்சிச் சாலையில், 'தாஜ்மஹால்', 'திருமயம் கோயில்', 'செஞ்சிக் கோட்டை வாசற்படி', 'அசோகனின் தூண்' முதலிய பல அழகிய சிற்ப வேலைகளைப் படமாக எழுதி மாட்டியிருந்தனர் பல ஓவியர்கள். தங்கள் சிற்ப பிதிருக்களைப் புகழ்வதில் அவ்வளவு பிரியமா இந்தச் சந்ததியாருக்கு என்று தோன்றியது.

நீர் வர்ணப் பகுதியில்தான் ஓவியத் திறமைக்குப் பலமான போட்டா போட்டி. அந்தப் பகுதியில் ஒரு படத்தைக் கூடச் 'சோடை' என்று சொல்வதற்கில்லை. ஒவ்வொரு படத்தையும் எழுத ஒவ்வொரு ஓவியனும் எவ்வளவு மாதங்கள் செலவிட்டானோ யார் கண்டது? அத்தனையையும் மொத்தமாக்கிக் கணக்கிட்டுப் பார்த்தால் அது பல வருஷங்களாகக் கூடும். அத்தனை வருஷமும் நம் முன்னே நிற்பது போலத் தோன்றியது இந்தப் பகுதி. அகில இந்தியாவிலும் புகழ் பெற்ற ஸ்ரீயுத ஸர்க்கார் தமது படங்கள் சிலவற்றை இந்தக் காட்சிக்கும் அனுப்பியிருந்தார். 'பாடகர்' என்ற படத்தில் பிடிலிலிருந்து எழும் நாதப் பிரும்மத்தில் பாடகர்கள் லயித்து விட்டது போலச் சித்தரித்திருந்தார். இந்தக் காட்சியில் அந்தப் படத்திற்கு ஓர் பரிசும் வழங்கப்பட்டிருந்தது. வண்ணத்திப் பூச்சி புஷ்பத்தோடு கொஞ்சுவது போலச் சித்தரித்திருந்தார் ராம ராவ். அடையார் மாதவ மேனன் எழுதிய அழகான படங்களும் இங்கேயிருந்தன. வெகு சுலபமாக ஆனால் வெகு ரமணீயமாகக் காட்சிகளை எழுதுவது சில சித்திரக்காரர்களின் லாகவம். இலைகளினூடே சந்திரன் தோன்றும் ஒரு காட்சியை ஸையத் அகமத் காட்டியிருந்தார். அவர் அதிக சிரமம் எடுத்துக்கொண் டிருக்கவில்லை; ஆனால் படமோ வெகு வெகு அழகு! இந்தப் பகுதியில்தான் ஜட்ஜுகளால் பெரிதும் புகழப்பெற்ற 'இளப்பிறை' என்ற படமும் இருக்கின்றது. நமது தோழர் ககன்ராய் எழுதிய படம் அது. இந்தப் படத்திற்குக் கட்டாயம் புகழ் காத்துக் கொண்டிருக்கிறது என்று போன விமரிசனத்தில் குறிப்பிட்டிருந்தோமல்லவா? எதிர் பார்த்தபடி இந்தக் காட்சியில் ககன் ராய்க்குப் புகழ் கிடைத்து விட்டது. முன்னம் நம்மால் குறிப்பிடப்பட்டிருந்த இளைஞன் தணிகாசலம் இந்தக் காட்சியில் 'கத்தரிப்புச் சித்திர' வேலையில் பரிசு வாங்கிவிட்டான். எல்லாவற்றையும் விட நமக்குச் சந்தோஷ மூட்டுவது நமது அன்பர் காளி கிங்கர் கோஷுக்குக் கிடைத்த மூன்று பரிசுகள்! வேறு யாருமே இரண்டுக்கு மேல் பரிசு பெறவில்லை. 'சங்கு' அன்பரான காளிஜி வரைந்த 'உயிரின் ஒளி' 'இரவுத் தோற்றம்' என்ற படங்களுக்கும் அவரது களிமண் உருவத்துக்கும் பரிசுகள் வழங்கியிருந்தனர். காளிஜியின் ஓவியத் திறமையும் சிற்பத் திறமையும் மேலும்மேலும் ஓங்குவதாக!

இந்தக் கண்காட்சி நடத்தியவர்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லாதிருக்க முடியவில்லை. காட்சி சாலைக்குள் நுழைவதற்கு ஆரம்ப தினங்களுக்கு வைக்கப்பட்டிருந்த டிக்கட் கட்டணம் மிக அதிகம்தான். உள்ளே நுழைய ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் கட்டணமென்றால் யார் வருவார்கள்? சித்திரம் எழுதி அனுப்பியவர்களுக்கு ஒரு நிரந்தரப் 'பாஸ்' தருவதால் காட்சிச் சாலைக்காரர்களுக்கு பிரமாதமாக நஷ்டம் ஏற்பட்டிருக்காது. இத்தகைய ஓவிய விருந்துகள் மதுரை, திருச்சி போன்ற இடங்களிலும் நடத்தப்பட வேண்டுமென்பது நமது ஆசை.

ஸ்திரீ—புருஷ தர்மம்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

கிராமங்களுக்குப் போய்ப் பாருங்கள். அநேக வீடுகளில் புருஷனுக்கும் மனைவிக்கும் நடக்கும் போராட்டக் காட்சியைக் காண்பீர்கள்; மாலை நேரத்தில் புருஷன் குடித்து மயங்கியிருப்பதையும், காலை முழுவதும் மனைவியை உதைத்துக்கொண்டிருப்பதையும் பார்ப்பீர்கள். இப்பேர்ப்பட்ட புருஷர்களிடமிருந்து ஸ்திரீகளைக் காப்பாற்றுவதற்கு, ராஜாங்கம் அதிகாரம் பெற்றிருக்கவேண்டும். தற்காலத்தில் ஒரு புருஷன் தனது மனைவியைக் கேவலமாக நடத்தினானால், "அது அவள் தலையெழுத்து; ஈசன் கட்டளை; அவளது பழவினை" என்றெல்லாம் சொல்லிக் கொண்டு சும்மா விருக்கிறோம். ஆனால், பொது உடைமை ராஜாங்கத்தில் இவ்விஷயத்தைப் பற்றி ஜனங்கள் என்ன தெரியுமா பேசிக் கொள்ளுவார்கள்? "தலைவிதி முதலியவை யெல்லாம் உண்மையாயிருக்கலாம். ஆனால், நாம் சில பரிகாரங்களைச் செய்து பார்ப்போமே. ஒன்றும் பலிக்காவிட்டால், கடைசியாக அந்தச் சமாதானம் இருக்கவே யிருக்கிறது" என்றுதான் சொல்லுவார்கள். என்னதான் இருந்தாலும், மனிதன் குறையுடையவன்தான். சில அம்சங்களில் அபிவிருத்தி செய்கிறோம். அப்பொழுது வேறு சில அம்சங்களில் புதிதாகச் சில குறைகள் தோன்றுவது சகஜம். ஆனால், குற்றத்தையும் நன்மையையும் சீர்தூக்கிப் பார்த்து எது அதிகமாயிருக்கிறது என்பதைக் கொண்டே முடிவு செய்து கொள்ள வேண்டும்.

பொது உடைமை ராஜாங்கத்திலும் விவாகம் செய்து கொள்ளும் உரிமை ஜனங்களுக்கு இருந்து வரும். ஆனால், எல்லாருக்கும் அவ்வுரிமை இருக்காது. இல்வாழ்க்கை நடத்தத் தகுதியில்லாத மனிதன் மணம் செய்துகொள்ள அனுமதி கிடைக்காது. ஒரு எஞ்சினை எப்படி ஓட்டுவதென்று தெரியாத மனிதனுக்கு யாராவது எஞ்சின் டிரைவர் வேலை கொடுப்பார்களோ? மாட்டார்களல்லவா. குடும்பங்களைப்போல எஞ்சின்கள் ஏராளமா யில்லை. எஞ்சின்கள் குறைவாயிருப்பதால், நல்ல எஞ்சினீர்கள் சில பேரைப் பொறுக்கிக் கொள்ள முடிகிறது. ஆனால், குடும்பங்கள் ஏராளமா யிருக்கின்றன. ஆகையால், இரண்டாந்தரம், மூன்றாந்தரமான ஜனங்களும் மணம் செய்து கொள்ள இடங்கொடுக்க வேண்டித்தான் இருக்கும். என்றாலும், சொஸ்தமே செய்ய முடியாத வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் மனிதர்களுக்கு விவாக உரிமை அளிக்கப்பட மாட்டாது.

இன்று தினம் தனி மனிதர்களுக்குச் சொத்துச் சுதந்திரம் இருக்கிறது. இதனால்தான் தகுதியற்ற மனிதர்களெல்லாம் கலியாணம் செய்து கொண்டு விடுகிறார்கள். நான் காக்கை வலிப்புக்காரனாக இருக்கலாம்; குஷ்ட நோயாளியாக விருக்கலாம். ஆனால், என்னிடம் நிறையப் பணம் இருந்தால் போதும். தௌர்ப்பாக்கியசாலியான ஒரு பெண்ணைப் பலி கொண்டுவிடலாம். தனி மனிதனுக்குச் சொத்து என்ற சங்கதியே இல்லாவிட்டால், ஒரு பெரு வியாதிக்காரனை எந்தப் பெண் விவாகம் செய்து கொள்ளுவாள்? ஆகையால் பொது உடைமை ராஜ்யத்தில், விவாக சம்பந்தமான சட்டதிட்டங்களே அவசியமில்லாம லிருக்கலாம். என்றாலும், அதிலும் தவறுகள் நிகழ்ந்து விடாதபடி பார்த்துக் கொள்ளுவதற்காகச் சில விதிகள் செய்து வைத்துக் கொள்ளப்படும்.

பொது உடைமை ராஜ்யத்தில் உடல் நோய் மாத்திரமல்ல; மன நோய்களைப் பற்றியும் கவனிக்கப்படும். சிடுமூஞ்சித்தனம், எப்பொழுது பார்த்தாலும் குற்றம் சொல்லிக் கொண்டிருத்தல், அடிப்பதில் ஒரு ஆசை இப்பேர்ப்பட்ட துர்க்குணங்கள் மன வியாதிகள் என்றுதான் நினைப்பார்கள். பெரு வியாதிக்காரனைப் போலவே, இந்தத் துர்க்குணங்கள் படைத்த மனிதர்களும் இல்வாழ்க்கைக்குத் தகுதியற்றவர்களென்றே முடிவு செய்யப்படும். இந்தத் துர்க்குணங்கள் ஒரு மனிதனிடம் இருப்பதாக ருசுச் செய்தால், விவாக விலக்குக்கு அனுமதி கொடுக்கப்படும்.

இதை யெல்லாம் கேட்கும்போது உங்களுக்குத் திகில் ஏற்படக்கூடும். நீங்கள் துளிக் கோபம் காட்டினாலும் உடனே உங்கள் சம்சாரம் கோர்ட்டுக்கு ஓடி விவாகவிலக்கு உத்திரவு வாங்கிவந்து விடுவாள் என்று நினைத்துப் பயந்து விடாதீர்கள். ஏதோ ஒவ்வோர் சமயம் புருஷனிடம் மனைவி சண்டை போட்டாளானால், அதனால், புருஷனது அன்பு அதிகரிப்பதுதான் சகஜம். இதே மாதிரியே, சில்லறைச் சண்டைகள் நடக்குமானால், மனைவி தன் புருஷனை மன்னித்து விடுவாள்.

பாலிய மணத்தின் சங்கதி என்ன? அதுபோன்ற மற்ற விஷயங்கள் எப்படியாகும்? இவையெல்லாம் ஐதீகங்களையும் சந்தர்ப்பங்களையும் அனுசரித்தே நடைபெற்று வரும் வழக்கங்கள். தேசத்தில் பஞ்சம் ஏற்பட்டு ஜனத்தொகை குறைந்து விட்டதென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுது, ஜனங்கள் அதிகமாய்க் கலியாணம் செய்துகொள்ள ஆதரவு கொடுக்கப்படும். பல ஸ்திரீ மணம், பாலிய விவாகம் முதலியவை நடப்பதற்குக்கூட அனுமதி கொடுக்கப்படும். இதெல்லாம் சமய சந்தர்ப்பங்களைப் பொறுத்தவை.

விவாகத்தின் நோக்கம் ஒரே ஒன்றுதான். நல்ல ஸ்திரீ புருஷர் ஜனிக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் அந்த நோக்கம். ஆகையால், மனிதர்களின் தொழிலையும் கவனித்தே விவாகத்திற்கு அனுமதி கொடுக்கப்படும். யுத்தத்திற்குச் செல்லும் சிப்பாய்க்கு மணம் செய்து கொள்ள அனுமதி கிடைக்காது போகலாம்; அது மாதிரியே சதா சர்வதாத் தனது தொழிலில் ஈடுபட்டிருக்கும் டாக்டருக்கும் அனுமதி அளிக்காம லிருக்கலாம்.

[இது Chats Behind Bars என்ற நூலினின்றும் எடுக்கப்பட்டது.]

Chats Behind Bars

BY

C. RAJAGOPALACHARI

Price As. 6 *Postage extra.*

Sangu Book Depot

Triplicane, Madras.

பிரியமான சாமான்

("மாயா" எழுதியது)

நூற்றுக்கு நூறு அமெரிக்கர் முட்டாள்கள் என்று ஒரு அருமையான பிரசங்கம் செய்தார் பெர்னார்ட்ஷா என்ற அறிஞர். இந்தப் பிரசங்க மாரியைப் பொழிவதற்காக, அமெரிக்க சபையொன்றின் முன் அவர் எழுந்து நின்ற பொழுது, அவருக்குப் பரம சந்தோஷம் உண்டாகிவிட்டது. "ஆஹா! இந்த இன்பமான சமயத்தில் எனக்குப் பாடமட்டும் தெரிந்திருந்தால், பேசவே மாட்டேன்; ஒரு கியால்தான் பாடியிருப்பேன்" என்று சொன்னார். சங்கீதத்தின் பெருமைக்கு இதைவிட வேறு அத்தாட்சி வேண்டுமோ? எனக்கு ரேடியோ சங்கீதத்தில் வெகு பிரியம். அதிலும் ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பல பிளேட்டுகளை வைக்கும்பொழுது, 'கணகண' வென்று விதம் விதமான பாட்டுகள் கொட்டிவிடும். இந்தப் பாட்டுகளின் எதிரொலி போலச் சமுத்திர அலையோசை மறு பக்கத்திலிருந்து வந்து கொண்டிருக்கும். இந்தப் பேரானந்தத்தை அனுபவிக்கும்போது, கண்டிப்பாகக் காலணாவுக்கோ அரையணாவுக்கோ பட்டாணிக் கடலை வாங்கிக் கொரிக்காமல் இருக்க என்னால் முடியாது. ஒருநாள் என்னுடைய இந்தப் பிரியமான பட்டாணிக் கடலை கிடைக்காமல் நாலு திசையிலும் கண்ணோட்டம் விட்டுக்கொண்டிருந்த பொழுது, சுருக்கென்று மனத்தில் தைக்கும்படியான ஒரு காட்சியைக் கண்டேன்.

"ஏ சுப்பி!—ஏ குப்பா! ஏ சுப்பி!—ஏ குப்பா!" என்று வெகு கோரமான குரலில் கத்திக்கொண்டு, ஒரு மனிதர் இங்கும் அங்கும் ஓடிக்கொண்டிருந்தார். ஒரு பைத்தியம் என்று கண்டிப்பாக அவரை நினைக்கவே முடியாது. அவர் மிக நாகரிகமாயிருந்தார். ஆனால், அவருடைய நடவடிக்கைகள் ரொம்பச் சந்தேகம் உண்டாக்கின. "சுப்பி, குப்பன்" கூக்குரல் வரவரக் கோரமாயிற்று; ஓட்டமும் நடையுமாய் ரேடியோவை, ஏழெட்டுப் பிரதட்சிணம் செய்துவிட்டார். பிறகு, வெகு வேகமாக "ஹோ!" என்று ஓசைப்படுத்திக் கொண்டிருக்கும் கடலை நோக்கி ஓடினார். தண்ணீருக்கு அருகே போன பொழுது, அவருடைய இடுப்புவரையில் மறைந்துவிட்டது; நான் விடவில்லை. மார்புக்கு மேல் தெரிந்த பாதி மனிதரைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது அவர் தேகத்தின் நடவடிக்கைகளிலிருந்து, அவர் ஏதோ "புட்பால்" ஆடுகிறாப் போல் இரண்டொரு வினாடிகள் காணப்பட்டது. ஒன்றிரு நிமிஷத்துக்குப் பிறகு, "புட்பால்கள்' போன்ற சுப்பி, குப்பன் என்ற இரு சிறு குழந்தைகளின் சிண்டைப் பிடித்து இழுத்துக்கொண்டு, இரைக்க இரைக்க ஓடி வந்தார் அந்த மனிதர். குழந்தைகள் உடம்பில் செக்கச் செவேலென்ற தழும்புகள் பல காணப்பட்டன.

சுமார் பத்துப் பதினைந்து நிமிஷ நேரம் சந்தோஷத்தை மறந்து, கவலையோடிருந்த எனக்கு மறுபடியும் சந்தோஷம் வந்தது; அதோடு ஒரு சந்தேகமும் வந்தது. "சங்கீதமோ பெரிய விஷயம். அதைக் கேட்கும்போது நம்மை மறந்து பரவசமாயிருக்க வேண்டும். அப்படியில்லாமல், இந்தக் கஷ்டத்தின்மீதெல்லாம் மனம் செல்ல வேண்டிய காரணம் என்ன?" என்று யோசித்தேன். நான் பட்டாணிக் கடலை மீது வைத்த பிரியந்தான் அதன் காரணம் என்று தெளிவாக விளங்கிற்று. அதிருக்கட்டும், சுப்பிக்கும், குப்பனுக்கும் ஏன் அடி விழுந்தது? இந்த இரண்டு குழந்தைகளுக்கும் சமுத்திர அலைகளோடு விளையாட ஆசை விழுந்ததுதான் பூசைக்குக் காரணம். சுப்பி, குப்பன்கள்மீது ஆசையில்லாதிருந்திருந்தால், அந்த மனிதரும் சிறிது நேரம் வரையில் அடைந்த பைத்திய அவஸ்தைக்கு ஆளாகியிருந்திருக்க வேண்டாம். இந்த மாதிரி ஒன்றுக்குப் பின் ஒன்றாகப் பல உதாரணங்கள் கிடைத்த பிறகு, "பிரியமான சாமான்களால்தான் நமக்குக் கஷ்டம் உண்டாகிறது, அல்லது பிரியமான சாமான்களுக்கு நம்மால் கஷ்டம் உண்டாகிறது" என்ற தத்துவம் யாருக்குத்தான் விளங்காமல் போயிருக்கும்? இந்தத் தத்துவம் விளங்கவே, இதுவரையில் எனக்குப் புரியாமல் கஷ்டப்படுத்திக் கொண்டிருந்த சில சமாசாரங்களும் விளங்கலாயின.

தோளுக்கு மிஞ்சிவிட்ட துஷ்டக் குழந்தையைக் கட்டிக்கொண்டு யாராவது அழுவார்களா? வீட்டை விட்டுத் தானே துரத்துவார்கள்? அப்படியிருக்க, இந்தியா என்ற துஷ்டக் குழந்தையை, ஏன் அய்யா பிரிட்டானிக்கா அம்மாள் பல தொந்தரைகளையும் பல்லைக் கடித்துச் சகித்துக்கொண்டு, பராமரித்து வருகிறாள்? காரணம், இந்தியாவிலுள்ள சிறுபான்மை வகுப்பார் மீது பிரிட்டானிக்காவுக்கு உள்ள பிரியந்தான் என்றால், நாம் நம்பித்தான் தீரவேண்டும்.

மிதவாதிகள் ஏன் முன்னும் போக முடியாமல் பின்னும் போக முடியாமல் அந்தர சொர்க்கத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள்? அதற்கும் அவர்களுடைய ஒரு பிரியமான சாமான்தான் காரணம். அவர்களுடைய பிரியமான சாமானுக்கு "அரசியல் அமைப்புச் சட்டம்" என்று பெயர். அந்தச் சீர்திருத்தச் சட்டம்தான் எப்படிப்பட்டது என்று நினைக்கிறீர்கள்? அது இனிமேல்தான் ரூபம் பெற்று வரப்போகிறது. என்றாலும், வருவதற்கு முன்னேயே, மிதவாதிகள் மடியில் தவழ வேண்டுமென்று லண்டனில் வெகு ஆவலோடு அந்தச் சட்டம் தவம் செய்து கொண்டிருக்கிறதென்று கேள்வி.

என்னவோ, உலகத்தில் 'கண்டதும் காதல்' என்ற விஷயம் ரொம்ப அவசியம் என்பதை ஒப்புக்கொள்ளும் கோஷ்டியையே நான் சேர்ந்தவன். கட்டுரைகள் எழுதவும், கதைகள் கவிதைகள் புனையவும் "கண்டதும் காதல்" ரொம்பவும் உபயோகமாயிருக்கிறதாகையால், அதை நாம் தள்ளமுடியாது. ஆனால், மிதவாதிகளுக்கும், வரப்போகும் சீர்திருத்தச் சட்டத்துக்கும் "காணாதபோதே காதல்" உண்டாகியிருக்கிறதே, இது எப்படி முடியப்போகிறதோ! இந்த விஷயத்தில்தான் எத்தனை விதமான ஹேஷ்யங்கள் சாத்தியமென்று பார்க்கவேண்டும்.

1. ரொம்பப் பிரியமான சாமான் பெரும்பாலும் கஷ்டத்தையே தருகிறது.

2. சில சமயம் நாம் கம்பளியை விட்டாலும், கம்பளி நம்மை விடமாட்டேனென்கிறது. ஆகையால், சட்டத்தை மிதவாதிகள் நிராகரித்தாலும், சட்டம் மிதவாதிகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளலாம். அல்லவா?



கவிதை

(1918-ல் ஸ்ரீயுத வ. வே. சு. அய்யர் எழுதியது)



ஒரு ஜாதியின் அறிவுக்கு ஜீவ நாடி பாஷையாக இருந்தால் பாஷைக்கே ஜீவாதாரம் கவிதைதான். மற்றப் பாஷைகளுக்கு மத்தியில் சமானமாக நிற்க ஒரு பாஷைக்குச் சந்நது கொடுப்பது அதன் காவியங்களும் கவிகளுமே யொழிய வேறில்லை. ஆனால் பழைய சந்நதுகள் மாத்திரம் போதா. ஒவ்வொரு தலைமுறையிலும் அதிகாரப் பத்திரத்தைப் புதுப்பித்துக் கொண்டு வந்தால்தான் கௌரவம் நிலைத்து நிற்கும். ஸ்பானிஷ் பாஷையும் போர்த்துக்கேஸிய பாஷையும் 400-வருஷங்களுக்கு முன் மிகவும் கீர்த்தி வாய்ந்திருந்தன. ஆனால் பிற்காலத்தவர்கள் அவைகளில் நல்ல கவிகள் உண்டாக்காததால் அந்தப் பாஷைகளின் கௌரவம் போய் விட்டது. தற்காலத்தில் இங்கிலீஷ், பிரெஞ்சு, ஜெர்மன் ஆகிய இந்த மூன்று பாஷைகள் தான் உலகத்தில் தலைமை வகித்துக் கொண்டிருக்கின்றன. நம் தமிழ் மொழியானது இயற்கைச் சக்தியிலும் பண்டை நாளைக் கவிதையிலும் அவைகளுக்கு இணையாகவே இருந்தாலும், இந்த நிமிஷத்தில் முதல்தரக் கவிகள் சிருஷ்டி செய்து உலகத்துக்குத் தராததால் அது மேலே சொல்லிய பாஷைகள் முன்னிலையில் சென்று சம கௌரவத்தைக் கேட்கப் பாத்திய மில்லாமலிருக்கிறது.

உலகம் அனைத்திலும் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கும் நவ யுகத்தில் கவிதைக் குரிய விஷயங்கள் எங்கே பார்த்தாலும் நிரம்பி யிருக்கின்றன. மகாப் பிரளயம் போல ஒரு யுத்தமானது இராப் பகல் ஓயாமல் நான்கு ஆண்டுகளுக்கு மேல் நடந்தது. மூன்று ராஜ்ஜியங்கள் உலகம் மெச்சும்படி போர் புரிந்து சர்வோத்கிருஷ்டமான வீரியத்தையும் சௌரியத்தையும் காட்டியும் சத்துரு வசமாகி விட்டன. ஆனால் அவற்றின் அரசர்களும் பிரஜைகளும் தர்ம சக்தி நிரம்பியவர்களாய் மானாபரணர்களாய் நின்று கொண்டு, எதிரியைப் போர் வெல்லும்வரையில் கத்தியை உறையில் சேர்ப்பதில்லை என்ற சங்கற்பத்துடன் போர்புரிந்தார்கள். இந்தப் புறம் நமது ஜாதியிலும் நமது நாட்டிலும் ததும்பிக் கொண்டிருக்கும் புதிய உணர்ச்சிகளும் புதிய ஆசைகளும் புதிய எண்ணங்களும் ஒரு பாரதத்துக்குப் போதும். ஸ்திரீகளின் நிலைமை, அனாதைகளின் துக்கம், பஞ்சத்தால் வருந்துவோரின் துயர், வாலிபர்களுக்குத் தீர வாழ்க்கையில் இருக்கும் பேரவா, ஜாதியின் தர்மாவேசம், தவிர நமது சித்திரங்கள், சிற்பங்கள், கலைகள், குடும்ப வாழ்க்கை இவைகள் அனைத்தையும் நம் கவிஞர் பாடலாம். இன்னும் ஜப்பானின் வெற்றி, சீனாவின் கண் விழிப்பு, நிகிரோவர்களுடைய ஏக்கம், நமது சகோதரர்கள் ஒப்பந்தக் கூலிகளாகச் சென்று படும் கஷ்டங்கள், இவைகள் எல்லாம் கவிதைக் குரிய விஷயங்களே.

பாடுவதற்கு இத்தனை விஷயங்கள் இருக்கையிலும் நமது பாஷையில் தற்காலம் வெளி வரும் பிரபந்தங்களும் பாக்களும், ஒன்று பழைய வழிகளை நாடியவையாக இருக்கின்றன; அல்லது புதிய துறைகளை அனுசரித்தால் வீரியமும் சுவையுமின்றி இருக்கின்றன. தோத்திரங்கள், பதிகங்கள், சதகங்கள், சிலேடை வெண்பாக்கள், கலம்பகங்கள், அந்தாதிகள், கீர்த்தனை தினிசுகள், மாலைகள், தூதுகள், கும்மிகள், அலங்காரங்கள் ஆகிய இவைகள் காற்றுக் காலத்தில் உதிரும் இலைகள் போல வருஷா வருஷம் கணக்கில்லாமல் வெளி வந்துகொண் டிருக்கின்றன. நவீன வழிகளை உண்டாக்கிக் கொண்டும் அனுசரித்துக் கொண்டும் சென்ற பத்து வருஷங்களில் நமது பாஷையில் சில கவித் தொகுதிகளும் காவியங்களும் பிரசுரமாகி யிருக்கின்றன. ஆனால் இந்த இரண்டு வகை இலக்கியங்களிலும் உண்மையான கவிதை அகப்படக் கூடிய கிரந்தங்கள் என்று நாம் சொல்லக்கூடவில்லை. தனிப் பாடல்கள் கூடக் கிடைப்பது மிகவும் துர்பலமாக இருக்கிறது.

ஜனங்கள் கவிதைக்குப் பறந்து கொண் டிருக்கின்றார்கள். நமது நாடகங்களில் சேரும் கூட்டங்களையும், சில்லறைப் பாட்டு வெளியிடுவோருக்குக் கிடைக்கும் லாபத்தையும் பார்த்தால் ஜனங்களுக்கு இருக்கும் கவிதா தாகத்தை ஒருவாறு அளவிடலாகும். ஆனால் அவர்களுடைய பசிக்கேற்ற உணவு கிடைப்பதில்லை. குதிரை தளதள என்றிருக்கும் பசும் புல்லும் நல்ல நீரும் கேட்கிறது. ஆனால் குதிரைக்காரன் மாடு மிதித்த வைக்கோற் கூளமும், சாலக ஜலமும் அதற்கு வைக்கின்றான்.

மனிதரின் இந்தத் தாகத்தை ஆற்றுவதற்கு நல்ல கவிஞர் முன்னுக்கு வரவேண்டும். இன்ன விஷயங்களை இன்ன ரீதியில் பாடலாகும் என்று ஒவ்வொரு கவிக்கும் அவனுடைய மனோ தர்மம் தான் கடைசியில் சொல்லித் தருதல் சாத்தியமானாலும், இலக்கண ஆசிரியர்களுக்கும் இது விஷயத்தில் ஒரு கடமை உண்டு. நாட்டில் கவிதையின் லக்ஷணங்கள் மறந்து போயிருக்கையிலும் மனித ஜாதியின் அபிவிருத்தியினால் கவிதைக்குப் புதிய பொருள் கொடுக்க வேண்டி யிருக்கையிலும், இலக்கணக்காரர் ஜனங்களுடைய கண்களையும் புலவர்களுடைய கண்களையும் திறக்க முயல வேண்டியது அத்தியாவசியம். இந்த அவசியத்தை முன்னிட்டுத்தான் நாம் இந்த வியாசத்தை எழுதத் துணிந்தோம்.

கவிதை என்பது என்ன? இந்தக் கேள்வியைக் கேட்பது சுலபம். ஆனால் பதிலளிப்பது மிகக் கடினம். இன்னது கவிதை அல்ல என்று சொல்லிவிடமுடியும். காவியங்களினின்றும் பிரபந்தங்களினின்றும் மேற்கோள்கள் எடுத்துக் காட்டி இன்ன ரஸங்களும் பாவங்களும் இவ்விதம் அமைந்திருப்பதால் இது நல்ல கவிதை, இது நல்ல கவிதை அல்ல என்று சொல்லுதல் சாத்தியம். உண்மையான கவிதை மனதில் இன்ன இன்ன உணர்ச்சிகளை உண்டாக்க வேண்டும் என்று நிர்ணயித்தலும் அசாத்தியமில்லை. ஆனால் கவிதையின் லக்ஷணத்தை உதாரணங்களின்றித் தெளிவுற எடுத்துரைப்பது அநேகமாய் முடியாத காரியமே.

ஒரு கவியிலாகட்டும் காவியத்திலாகட்டும் இரண்டு உறுப்புக்கள் உண்டு. அவைகளில் ஒன்று அவைகளின் அமைப்பு அல்லது நடை, மற்றொன்று அவைகளின் பொருள் அல்லது பாவம். இந்த உறுப்புக்கள் இரண்டும் எந்தக் கவியில் மிகவும் அழகாக அமைந்துள்ளனவோ, அதுதான் நல்ல கவி. இவ்விரண்டு உறுப்புக்களினுள்ளும் பொருள் தான் முக்கியமானதாக இருந்தாலும் கவிக்குக் கவியுருவம் அல்லது யாப்பு இன்றியமையாதது. எவ்வளவு அழகான அல்லது உன்னதமான பாவமிருந்தாலும் யாப்பில்லாதது கவியாகாது.

இது வெளிப்படை. இதைப் பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. ஆனால் யாப்பிலக்கணங்கள் எல்லாம் குறைவறப் பொருந்தியிருக்கிற கவிகளும் காவியங்களும் எத்தனையோ தமிழ்ப் பாஷையில் இப்பொழுதும் வெளிவந்துகொண்டிருக்கின்றன. எனினும், அவைகளினிடத்துக் கவிதை என்று நாம் சிறப்பித்துக் கூறும் லக்ஷணம் இல்லாமையால், அவைகள் படிப்போர் அல்லது கேட்போருடைய இதயத்தைத் தொடுவதில்லை.

கவிதை இல்லாத கவி உயிரில்லாத உடல் போல; கவிதை இல்லாமல், அல்லது தமக்குள்ளே இருக்கும் கவிதையை வெளியில் கொண்டுவராமல், கவி எழுதுவோர் உலகத்தை மோசம் செய்கிறார்கள். இலுப்பை எண்ணெயை நெய்யென்று விற்கும் வாணிகர் இவர்களை விட எத்தனையோ மடங்கு நல்லவர்கள். ஏனெனில் அவர்கள் நாக்குக்கும் உடலுக்கும் தான் கெடுதி செய்கிறார்கள்; இவர்களோ, ஆத்மாவுக்கு அமிருதபானம் கொடுத்துத் திருப்தி செய்வதாகப் பாசாங்கு செய்துகொண்டு, சாரமில்லாத வார்த்தைகளைப் போட்டுக் காதைத் தொளைத்து விடுகிறார்கள்.

மகோன்னதமான கவிதையின் லக்ஷணத்தைச் சுருக்கமாகச் சொல்லுவதானால், அது மனிதனுடைய அறிவை விவகார உலகத்தினின்று தட்டி எழுப்பி அதற்கு அகண்ட உணர்ச்சியை உண்டாக்க வேண்டியது என்பதே. கவிஞன் எந்த பாவத்தை வேண்டுமென்றாலும் சொல்லலாம், எந்த ரஸத்தை வேண்டுமென்றாலும் கையாளலாம். ஆனால் அந்த ரஸங்களும் பாவங்களும் கேட்போரின் இதயத்தில் அகண்டப் பொருளின் சாயை விழும்படி செய்ய வேண்டும்.

எவ்வளவுக்குக் கவியின் இதயம் நிஷ்களங்கமாக விருக்கிறதோ, எவ்வளவுக்கு அவனுடைய அறிவு சத்தியத்தில் தோய்ந்து கொண்டேயிருக்கிறதோ, எவ்வளவுக்கு அவன் மனத்தில் சிரத்தையிருக்கிறதோ, எவ்வளவுக்கு அவன் மனிதனுடைய சுக துக்கங்களை அன்போடும் ஆதரவோடும் கவனித்துப் பாடுகிறானோ, அவ்வளவுக்கு அவனுடைய கவியானது உயர்ந்ததாக இருக்கும். அவன் க்ஷணபங்குரமான விஷயத்தைப் பற்றிச் சொன்னால்கூட அதற்கு ஒரு உயர்வு உண்டாகி விடும். ஏனெனில் அவன் சித்தத்தின் அடிநாதம் அகண்டவஸ்துவாக இருக்கிறது.

புதிய கவிகள் நம் கண்ணுக்குப் படும்போது அவைகளின் யோக்கியதையைத் தெரிந்து கொள்ளுவதற்கு நமக்கு உறைகல்லாக இருக்கக் கூடியவை உலகத்தின் மகா கவிகளின் வாக்குகளே என்று மாத்தியூ ஆர்நால்டு என்னும் ஆங்கில இலக்கணி கூறுகிறார். நாம் அதை முற்றிலும் அங்கீகாரம் செய்கிறோம். அந்த மகா கவி வாக்குகளின் ஒரு ஏழெட்டு நம் காதில் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டே வந்தால், நாம் எப்பேர்ப்பட்ட கவிகளையும் நேர் சீர் பார்த்து விடலாம். அப்படிக் கட்டளைக் கற்களாக விளங்கக்கூடிய சில கவிகளை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

காட்டுக்குப் போகவேண்டும் என்று கைகேயி உத்தரவு செய்ததும் கம்பன் ராமனை வருணிக்கிற இந்தப் பாட்டைக் கவனித்திடுக.

இப்பொழுது எம்மனோரால்
  இயம்புதற்கு எளிதே யாரும்
செப்பருங் குணத்து இராமன்
  திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பு
  அவ்வாசகம் உணரக் கேட்ட
அப்பொழுது அலர்ந்த செந்தா
  மரையினை வென்றது அம்மா!

* * *

சிற்சில வேளைகளில் அரைப் பாட்டு அல்லது ஒரு அடி கூடப் போதும்.

அநுமான் ராவணன் அரண்மனையில் சீதையைத் தேடிவிட்டு வரும்போது சொல்லிக் கொள்ளுவதை வர்ணிக்கிற

"நெக்கு நின்றனன் நீங்கும் அந்தோ
  இந்த நெடு நகர்த் திரு என்னா"

என்ற ஒரு அடியும், சீதையின் கற்பு மாசுண்டதில்லை என்று கண்டதும் அநுமான் சொல்லும் "யாவது இங்கு இனிச் செயலரிது" என்கிற அரை அடியும், ராமதூதன் என்று அநுமானைத் தெரிந்து கொண்டதும் "உய்தல் வந்துற்றதோ, என்று அருவி நீர் ஒழுகும் கண்ணாள்" "ஐய, சொல், ஐயன் மேனி எப்படிக்கு அறிதி என்றாள்" என்ற சீதையின் வர்ணனையும் வாக்கும் ஆகிய இவை கவிதையின் வரம்பைக் காட்டும் மகாவாக்கியங்கள். சீதையின் அக்கினிப் பிரவேச வர்ணனையான

கனத்தினால் கடந்த
  பூண் முலையவைகளை
மனத்தினால், வாக்கினால்
  மறு வுற்றேன் எனின்
சினத்தினால் சுடுதியால்,
  தீச் செல்வா என்றாள்
வனத்துழாய்க் கணவற்கும்
  வணக்கம் போக்கினாள்.

என்ற விருத்தத்தின் கடைசி அடியின் பாவம் இரண்டாந்தரமான கவிஞர்களின் இதயத்திற் பிறக்காது. இதற்கு இணை மகா பாரதத்தில் ஒரு சுலோகார்த்தத்தில்தான் நான் கண்டிருப்பதாக எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது திரௌபதியைப் பணயம் வைக்கக் கூடாது என்று, பீமன், பல தடவைகளில் சொல்லியும் யுதிஷ்டிரன் கேட்காது போகவே

"ஹஸ்தம்தே ஸந்த தக்ஷ்யாமி
  ஸஹ தேவாக்னிமா நய:"

"யுதிஷ்டிரா, உன் கையை இதோ எரித்துப் போடுகிறேன்—ஸஹதேவா

கொண்டுவா தீ!" என்று பீமன் சொல்லுகிற வார்த்தைதான்.

"இனியாரை நம்பி உயிர் வாழ்வம் எந் [தன்
இறையோனும் யானும் அவமே"

என்ற ஆசு கவியின் வாக்கில் உண்மையான கவிதா நாதம் இருக்கிறது.

இவை போதும். இவைகளை அடிக்கடி சொல்லிக் கொண்டு நம் காது பழகி விட்டால், தப்பு நாணயத்தை ஸராபின் காது சொல்லி விடுவது போலவே நம்முடைய காதும் சொத்தைக் கவிகளைக் கண்டறிந்து தூக்கியெறிந்து விடும். கவிதையின் ரகசியமோ இந்தக் கவிகளுக்குள் அடங்கி விட்டன. இச் செய்யுட்களைச் சிந்திக்கையில் நமது சித்தம் எந்தவிதமாக விரிகின்றதோ, எந்த விதமான பேருணர்ச்சியைச் சுவைக்கின்றதோ, அந்த விதம் நமது சித்தத்தை விரிகின்ற அந்த விதமான பேருணர்ச்சியை நமது சித்தம் சுவைக்கும்படி செய்கின்ற கவிகளில்தான் உண்மையான கவிதை உண்டு.

அப்படியானால் இந்தச் சர்வோன்னதமான கவிகளின் தன்மை என்ன? ஏன் இவைகளுக்கு இத்தனை மகிமை கொடுக்கிறோம்? இந்தக் கேள்விகளுக்கு வார்த்தையினால் பதிலளிப்பது கடினம். ஆனால் இந்தக் கவிகளைப் படிப்போர் தமக்குள்ளே நன்றாகப் பாவித்துப் பார்த்தால், கட்டாயம் அறிந்து கொள்ளுவார்கள். அப்படிக்கிருப்பினும் இவைகளின் தன்மையைப் பற்றிக் கூடிய வரையில் ஆராய்ச்சி செய்து கவி எழுத விரும்புவோருக்கும் கவிதை அநுபவிக்க விரும்புவோருக்கும் மிகப் பயன்படும். ஆதலால் இவ்விடத்தில் சில வார்த்தைகள் சொல்லுவோம்.

[இதன் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்க்கவும்.]

Have your Majestic figures at
R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.
"The Best" and most up-to-date style and finish.
Artists & Bromide Enlargers & Oil Painters.
55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

புதுச்சேரியில் பாரதியாரோடு

(வ. ரா. எழுதியது)

அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்ததும், பங்களா முதலிய வசதிகள் அவருக்கு இருக்க வில்லை. கலவை சங்கரச் செட்டியார் வீட்டு மூன்றுவது மெத்தையில், அரவிந்தரும் அவரது சிஷ்யர்களும் வாஸம் செய்து வந்தார்கள். சாயங்கால வேளைகளில், பாரதியாரும் சில பொறுக்கியெடுத்த அவரது நண்பர்களும் அரவிந்தரின் இடத்துக்குச் செல்லுவார்கள் சம்பாஷணைக்காக.

தலைவர்களின் சம்பாஷணைத் திறன்கள்

அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்த தலைவர்களிடம் ஏகதேசம் எனக்குப் பழக்கமுண்டு. சத்தியாக்கிரக இயக்கத்துக்குப் பின் தோன்றிய தலைவர்களிடமும் சிறிது அறிமுகமுண்டு. காந்திஜீயையும் தெரியும். ஆனால் சம்பாஷணையின் மாண்பிலும் இனிப்பிலும், அரவிந்தருக்கும் பாரதியாருக்கும் இணையாக யாரையுமே சொல்ல முடியாது என்பது எனது கருத்து. ஒரு வேளை, காந்திஜீயையும், கபர்தேயையும் விலக்காகச் சொல்லலாமோ என்னவோ!

திலகரின் சம்பாஷணையில் பொருளும் சக்தியும் இருக்கும். ஆனால் வழவழப்பும் இனிப்பும் ஹாஸ்யமும் இருக்காது. கபர்தே (திலகரின் தோழன்) யின் பேச்சில் வியக்கத்தக்க நகைச்சுவையும், சிருங்காரமும் செழித்து இருக்கும். சுரேந்திரநாதரின் பேச்சே பிரசங்கம். விபினசந்த்ரபாலரின் பேச்சில், கசப்பும் சுளிப்பும் கலந்து நிற்கும். ஆனால் சக்தியும் நவீனமும் இருக்கும். கோகலேயின் பேச்சு தங்கக் கம்பி இழை; சன்னப்பேச்சு. பிரோஸிஷாவின் பேச்சு தடியடி முழக்கம். லஜபதிராய் அமரிக்கையுடன் முன் எச்சரிக்கை நிறைந்த பேச்சுப் பேசுவார். ஜி. சுப்ரமணிய அய்யர் விஸ்தாரமாகப் பேசுவார். ஆனால் பேச்சிலே பிடிப்பு இராது. சேலம் விஜயராகவாச்சாரியார் சட்ட மேற்கோள், சரித்திர மேற்கோள் இல்லாமல் பேசவே மாட்டார்.

பாரதியார்—அரவிந்தர் சம்பாஷணையில் நவரஸங்களும் ததும்பும், ஒழுகும். கவிதை, சரித்திரம், தத்துவம், அனுபவம், கற்பனை, ஹாஸ்யம், குறுக்கு வெட்டு, விஸ்தாரம், உண்மைக்கு ஆவல், அபரிமிதமான இலக்கியச் சுவை, எல்லையில்லாத உடல் பூரிப்பு— எல்லாம் சம்பாஷணையினிடையே இடைவிடாது நர்த்தனம் செய்யும். அந்தக் காலத்திலே (Short hand) குறுக்கெழுத்து நான் பழக்கிக் கொள்ளவில்லையே என்று வருந்துகிறேன். சம்பாஷணையில் சிற்சில சம்பவங்களும் குறிப்புகளும்தான் இப்பொழுது என் நினைவில் இருக்கின்றன. தினசரி எழுதும் பழக்கமும் இல்லை என்னிடம். அளவற்ற நஷ்டம். இப்பொழுது என்ன செய்கிறது?

ஸ்ரீயுத அய்யர்

அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்த சில மாதங்களுக்குப் பிறகு, வ. வே. சு. அய்யரும் வந்து சேர்ந்தார். தீவிரமாய் அய்யர் உழைத்தார் என்பது அரசாங்கத்தாரின் சந்தேகம். பாரிஸ்டர் பட்டத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்து விட்டார் அய்யர். அவர் பேரில் வாரண்டு. வாரண்டுக்கு எப்படியோ தப்பித்துக் கொண்டு, இங்கிலாந்திலிருந்து புதுச்சேரிக்கு அய்யர் வந்து சேர்ந்தார்.

தேசபக்தர்களுக்குள் அய்யரைப் போல, நூல் பழக்கம் உள்ளவர்கள் யாருமே இல்லையெனச் சொல்லலாம். அபாரமாகப் படிப்பார். வீரர்களின் சரித்திரம், இலக்கியம், யுத்த சாஸ்திரப் புஸ்தகங்கள், பழைய தமிழ்க்காவியங்கள், பிறநாட்டு நல்லறிஞர்களின் நூல்கள் இவைகளை அய்யர் இடைவிடாது படித்துக்கொண்டிருப்பார். கஸ்ரத் செய்வதில் அய்யருக்கு ரொம்ப ஆவல். நீந்துவார், ஓடுவார். பாரதியாருக்கு இவைகளிலெல்லாம் ரொம்ப ஆசைதான். ஆனால் செய்வதேயில்லை. எல்லாவற்றையும் பக்கத்திலிருந்து கொண்டு, உற்சாகத்துடன் வேடிக்கை பார்ப்பார்.

அய்யர் கஸ்ரத் செய்யும்போது பாரதியார் பார்த்துக் கொண்டிருந்தால், அய்யர் எப்படி உடம்பை வளைக்கிறாரோ, அதைப்போல், பாரதியார் தன் நினைவு இல்லாமல், வளைப்பார். பாரதி

யாரின் உள்ளம் அவ்வளவு உற்சாகம் நிறைந்த உள்ளம்; மெழுகு உள்ளம். யோசித்து ஈடுபடுகிற உள்ளமல்ல. நல்ல காரியங்களில், யோசனையின்றி, அவரது உள்ளம் ஒட்டிக்கொள்ளும். இதற்குத்தான் கவிதை உணர்ச்சி என்று பெயர். இதுவே காதல் உள்ளமாகும்.

அய்யர், பாரதியார், சீனிவாஸாச்சாரியார் முதலியோர் அரவிந்தரின் வீட்டுக்குச் சென்று பேசத்தொடங்கினால், பொழுது போகிறதே தெரியாது. மாலை நான்கு மணிக்குப் பேச ஆரம்பித்தால், இரவில் பத்து மணி வரைக்கும் வேறு எந்தச் சிந்தனையுமே இருக்காது. சாப்பாட்டைப் பற்றிக் கவலை எதற்கு? வள்ளுவனார் தான் விதி சமைத்து விட்டாரே?

இந்த சம்பாஷணையின் அற்புதம் என்னவென்றால், சாதாரணமாக முடியாது என்று தோன்றும் காரியங்களெல்லாம், அவர்கள் சன்னிதானத்தில் இருக்கும் வரையில் சுளுவாகச் செய்து முடித்துவிடலாம் என்று தோன்றும். காரியசித்திக்கு நடுவே, கஷ்டம் இருப்பதாகவே தோன்றாது. “மலையை நகரச் செய்யும்” தன்னம்பிக்கை இவர்களிடம், இந்தக் கூட்டத்தில் இருந்தது என்று சொல்ல வேண்டும்.

லாப நஷ்டக் கணக்குப்பார்க்கும் காரியத் திட்டத்தால், சுதந்திரமும், சரித்திரமும் பிறப்பதில்லை; உண்டாவதில்லை. ஆழத்திலிருக்கிற பொருளை எடுக்கவேண்டுமானால், தண்ணீரில் தலைகீழாய் பாயவேண்டும். பெரிய காரியங்களுக்குத் தலைகீழாய்ப் பாயத் தூண்டும் தன்னம்பிக்கை தான் தேவை.

—காந்தி.

எங்கள் பாட்டி

“ஜோதி”

1. ‘பாட்டி! தலைவலி’ என்றுசொன் னேன்அவள்
பட்டென்று சுக்கை அரைத்துப் போட்டாள்.
கேட்ட வியாதிக்குக் கீரை கிழங்கு
கிராம்பு கடுக்காய் மருந்துரைப்பாள்.
வீட்டில் எவருக்குக் காய்ச்சலா னாலும்
விடிவதற் குள்அவள் சொஸ்தம் செய்வாள்.
நாட்டு மருந்துக்குப் புஸ்தகம் எதுக்கு
நான்சொல்லும் சரக்கினைக் கேட்டிடென்பாள்.

2. எங்கள் கிராமத்தில் முப்பது வருஷமாய்
எத்தனை யோபிள்ளைப் பேறுகளைச்
சங்கட மில்லாமல் விளக்கெண்ணெய் பூண்டினால்
சாமர்த் தியமாகச் செய்துவிட்டாள்.
அங்கொரு பேர்த்திக்கு நளிர்சுரக் கஷாயம்
அரைத்துக் கொடுப்பாள்; மறுகணத்தில்
இங்கொரு வீட்டிலே மாந்தத்திற் காகவோர்
எண்ணெய் வடிப்பாளெம் பாட்டியம்மா.

3. நோய்க்கு வயித்தியம் செய்வது தானா? நீ
நூதன மாகவோர் வேஷ்டிகட்டு.
வாய்க்கு வருவதெல் லாம்சோ திடமாக
வகுத்துரைப் பாள். எதிர் ஓடின அந்
நாய்க்கு நரிக்குச் சகுன பலன்சொல்வாள்
நாளொடு நட்சத்தி ரங்கள்சொல்வாள்
தாய்க்குக் குழந்தைக்கு மாமனுக் காகாத
சாத்திர மெல்லாம் விரித்துரைப்பாள்.

4. ‘பாட்டி! பாட்டி! ஓர் கதைசொல்ல மாட்டாயா
படுத்துக்கொள் வோம்’ என்று சொல்லிவிட்டால்,
நீட்டி இனித்த சுவைக்கதை எத்தனை
நேரம் சொல்வாள்! அதில் ஈடுபட்டால்
வீட்டில் இருக்கும்எங் கள்மனம் காட்டிலும்
விண்ணிலும் ஓடி விளையாடும்;
நாட்டிலில் லாத புத்தம்புதுக் காட்சிகள்
நனவினி லேகன வாக்கிவிடும்.

5. மருத்துவம் சோதிடம் கதைசொல்வ தெல்லாமும்
வல்லவள் பாட்டி. இவை மட்டோ!
பெருத்த கணக்கெல்லாம் கைவிரல் காட்டிப்
பிரித்துப் பொருத்தியே போட்டுக்கொள்வாள்.
தெருத்திண்ணைச் சுவரிலே தயிர்க்காரி போட்ட
சிறுபொட்டு, பொய்யா நிசமாஎன்று
கருத்தில் நினைந்து கணக்குப் பார்த்துப்பின்பே
காசினைக் கையில் கொடுத்திடுவாள்.

6. எத்தனை பாட்டுக்கள் கேட்டாலும் பாட்டியின்
இனியதா லாட்டுக்கீ டாவதில்லை.
அத்தனை யும்அவள் நெஞ்சி லிருந்தே
அவ்வப் பொழுது புறப்படுமாம்.
சுத்தமாக அவள் செய்யுள் இலக்கணத்
தொந்தரவை அறியாதவள்தான்.
‘வித்தையா பாடுதல்? எகனை மொகனைகள்
வேணுமென் றால்வந் திடாதோ?’ என்பாள்.

7. அரிய மனுஷிஇப் பாட்டியைப் போல்பவர்
அகப்பட மாட்டார்கள். கூடை, பெட்டி,
பெரிய நிரைச்சல்கள், கீற்று முடைவதில்
பேர்பெற்றவள் எங்கள் பாட்டியம்மா.
புரிய வில்லையவள் செய்கையெல்லாம்—சில
புள்ளிகள் போடுவாள்; ஓர் கணத்தில்
அரிய சித்திரங்கள் கோலப் பொடியினால்
அமைத்து விடுகிறாள்—ஆச்சரியம்!

குறிப்புகள்

'அச்சா' கல்கத்தா!

கல்கத்தாக் கார்ப்போரேஷன் நிதிக் கமிட்டியார் ஹரிஜன முன்னேற்றத்துக்காக $1\frac{1}{4}$ லட்ச ரூபாயை எடுத்து வைப்பதென்று முடிவு செய்திருக்கிறார்களாம். இந்தமாதிரி தாராள சிந்தையை எந்தக் கார்ப்போரேஷனும் முனிஸிபாலிட்டியும் இதுவரை காட்டியதில்லை. சென்னையிலும் கார்ப்போரேஷன் என்று ஒன்று இருக்கிறது. தென்னாட்டிலும் ஏராளமான முனிஸிபாலிட்டிகள் இருக்கின்றன. இவைகளிலெல்லாம் யார் யாருக்கு வரவேற்புத் தரலாம் யார் யாருக்கு வழியனுப்புப் பத்திரம் படித்துத் தரலாம் என்ற யோசனையே பிரமாதமாக இருந்து வருகிறது. ஒழிந்த வேளைக்குச் "சபையில் வெற்றிலை பாக்குப் போடலாமா?" என்ற விவகாரமோ, "பன்றியைத் தெருவில் கொல்லமுடியுமா முடியாதா" என்ற சர்ச்சையோ தீர்க்கமாக வாதிக்கப் படுகின்றன. என்றைக்குத்தான் உருப்படியான வேலைக்குச் சென்னை மாகாணத்தில் கார்ப்போரேஷனும் முனிஸிபாலிட்டிகளும் தயாராகுமோ?

மரண தண்டனை!

கொலைக் குற்றத்தை விசாரித்து நிரூபித்து மரண தண்டனை விதிப்பது கோர்ட்டுகளின் வழக்கமாயிருந்து வருகிறது. ஆனால் வங்காள சர்க்கார் புரட்சி யியக்கத்தை அடக்குவதற்காகச் சிருட்டித்துள்ள சட்டத்தில் ஓர் பகுதி மகா கடுமையைக் காட்டுகிறது. கொலைக் குற்றம் ஏதுமில்லாதிருப்பினும், ஏதோ சில ஆயுதங்களை வைத்துக் கொண்டிருப்பவனையும் மரண தண்டனைக்குள்ளாக்கலாமென அந்தப் புதிய சட்டம் சொல்லுகின்றதாம். கொலைக் குற்றம் ருசுவாக்கப்பட்டபோதினும் மரண தண்டனை விதிப்பது தப்பிதம் என்று உலகில் பல நாட்டின் அறிஞர்கள் எண்ணிவரும் இக்காலத்தில், இந்தியாவில், வங்காளத்தில் ஹேஷ்யத்தினாலேயே ஒருவனுக்கு மரண தண்டனை. தந்துவிடலாமெனச் சட்டம் ஏற்படுவது விபரீதப் போக்காய்த்தானிருக்கிறதல்லவா? இந்த மாதிரி வங்காளச் சட்டசபை செய்துள்ள இந்தச் சட்டத்தை இந்திய சர்க்காருக்கு மாற்றியமைக்க உரிமையுண்டா இல்லையா, பார்ப்போம்.

அழுக வாழைப்பழ யோசனை

அழும் பிள்ளையைச் சாந்தம் செய்ய அழுக வாழைப் பழத்தைக் கொடுத்து ஏமாற்றுவது சில பெற்றோர்களின் தந்திரம். தபால் கட்டணங்கள் ஜாஸ்தியென்று தேசத்தில் கூக்குரல் அதிகமாயிருக்கவே அதற்குப் பரிகாரம் செய்வதுபோல அபிநயித்து ஸர் ஜார்ஜ் ஷூஸ்டர் சில ஏற்பாடுகளைச் செய்வதாக வாக்களித்தார். அவருடைய ஏற்பாடுகள் புதிதாகத் தோன்றினாலும் அதனால் தேச மக்களுக்கு எவ்வளவு பிரயோஜனம் ஏற்பட்ப் போகிறது என்பது வெகு சந்தேகம். உதாரணமாக $\frac{1}{2}$ தோலா எடையுள்ள கவருக்கு ஒரு அணா ஒட்டினால் போதுமென்பது அவரது யோசனைகளில் ஒன்று. சாதாரணமாக இப்போது உபயோகத்திலுள்ள கவரை நிறுத்துப் பார்த்தால் $\frac{1}{2}$ தோலா எடையிருக்கிறது. அப்புறம் அதற்குள் கடுதாசியை எப்படி வைக்கிறது? அல்லது இனிமேல் காற்றுடிக் கடுதாசியில் கவர் பண்ணிக் காகிதம் போடவேண்டும் போலும். 'அரைத் தோலா எடை' என்ற சட்டம் தெரியாமல் பாமர மக்கள் சாதாரணக் கவரின்மீது ஒரு அணா ஒட்டிப் போட்டுவிட்டு திண்டாடப் போகிறார்கள். ஏதோ தபால் கட்டணத்தில் சகாயம் செய்திருப்பது போலக் காட்டுவது ஷூஸ்டரின் சாமர்த்தியங்களிலொன்று என்பது தெரிகிறதல்லவா?

முஸோலினி கடிதம்

நமது சங்கு அன்பர்களில் ஒருவரான ஸ்ரீயுத கே. இ. சிவராம்ஜி அவர்களுக்கு இத்தாலி ஸர்வாதிகாரி முஸோலினியிடமிருந்து கடிதமொன்று வந்திருக்கிறதுபற்றிச் சந்தோஷிக்கின்றோம். ஐரோப்பாவில் 'பைஸா' என்ற நகரில் உலகின் அதிசயங்களிலொன்றாக இருந்துவரும் சாய்ந்த கோபுரம் வரவர அதிகமாகச் சாய்ந்து வருகின்றதாம். அந்தக் கோபுரத்தைக் காப்பாற்றுவதற்கான பல யோசனைகளை ஸ்ரீயுத சிவராம்ஜி முஸோலினிக்கு எழுதியிருந்தார். "தங்களுடைய யோசனைகள் அனைத்தும் இந்தப் பைஸாக் கோபுர விஷயத்தில் பிரயோசனப் படுமென்று சொல்வதற்கில்லை. ஆயினும் உங்களது ஆலோசனைகள் வெகு நல்லவை; உபயோகரமானவை என்பதை அறிவித்துக் கொள்கிறோம்" என்பது முஸோலினியின் பதில்.

நண்பர் சிவராம்ஜி எந்த என்ஜினியரிங் கலாசாலையிலும் வாசித்தவரல்லவென்பதும் சாதாரணப் படிப்பைக் கொண்டே இத்தகைய ஆலோசனைகளையெழுதி ஒரு அந்நிய சர்க்காரிடமிருந்து நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறாரென்பதும் குறிப்பிடத்தக்கவை.

ராம் மோஹனுடைய

வட இந்தியா யாத்ரா ஸ்பெஷல்

(பதினைன்றாவது யாத்திரை)

1934-ம் வருஷம் எப்ரல்மீ 9உ

சென்னையைவிட்டுப் புறப்படும்.

கீழ்க்கண்ட இடங்களுக்குப் போகும்.

கால விவரம்

10 ஹரிஹர் (துங்கபத்ரைநதி)
11 கோலாப்பூர் (ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஸ்தலம்)
12 பண்டர்பூர்
13, 14, 15 பம்பாய்
16-17 நாசிக் (பஞ்சவடி திரயம்பகம்)
18 ஹோஷங்காபாத் (நர்மதை)
19 ஆக்ரா
20-21 மதுரா, பிருந்தாவனம், கோகுலம், கோவர்தனம்
22-23 டெல்லி
24, 25, 26 ஹரித்வார் (ரிஷிகேஷ்)
27 லக்னோ
28 அயோத்தி, நந்திக்ராமம்
29-30 பிரயாகை (த்ரிவேணி,) அலஹாபாத்)

மேமீ
1, 2, 3, 4, 5, ஸ்ரீகாசி
6-7 கயா
8, 9, 10 கல்கத்தா
11 பூரி, ஜகன்னாத்
12 ராஜமஹேந்திரி (கோதாவரி)
13 பெஜவாடா (கிருஷ்ணா)
14 சென்னைக்கு திரும்பிவரும்

மேமீ 14உ

மதராசுக்குத் திரும்பி வரும்.

சார்ஜ்கள் :—

மூன்றாவது வகுப்பு ரூ. 85

இரண்டாவது வகுப்பு „ 200

மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

ராம் மோஹன் கம்பெனி,

21, செகண்டு லேன் பீச்சு, மதராஸ்.

பல்லைக் காட்டுகின்றான்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தினிடம் பல்லைக் காட்டி இச்சகம் பேசிப் பிழைக்கின்ற அந்நிய தேசங்கள் பல உண்டு. இன்றைக்கு ஜர்மனியில் அத்தகைய மனோபாவம் ஏற்பட்டு வருகிறது. அந்த மனோபாவத்தைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் இந்தியாவைப் பற்றியும் மகாத்மாவைப் பற்றியும் தாறுமாறாகப் பேசுவதற்கு ஜர்மனிக்காரனுக்கு என்ன பாத்யதை இருக்கிறது? ஜெனரல் கோயரிங் என்று ஓர் பேர்வழி. ஹிட்லருக்கு அடுத்த ஸ்தானத்தில் அவன் இருக்கின்றான். அவன் ஓரிடத்தில் சொல்லியிருக்கின்றான்.

"எங்களுக்கு இங்கிலாந்தினிடம் கசப்புக் கிடையாது. ஜர்மனியாரும் ஆங்கிலேயரும் இரத்த சம்பந்தமுடையவர்கள். ஆனால் இந்த காந்தி யென்பவரை ஓர் விடுதலை வீரரெனச் சொல்வதை நான் பொறுக்கமாட்டேன். காந்தி யென்பவர் பிரிட்டிஷாருக்கு விரோதி. போர்ஷ்விக்கரின் ஏஜெண்டென்றே அவரைச் சொல்லவேண்டும். ஒரு காந்தியாள் சில நாட்களுக்கு முன்னே என்னைச் சந்திப்பார் போலிருந்தது. நான் சந்திக்காதிருந்துவிட்டேன்" என்று இந்த மகாமேதாவி அரட்டை யடித்திருக்கின்றான். மகாத்மா காந்தி ருஷியாவின் ஏஜெண்டு என நினைத்துக் கொண்டிருக்கும் இந்த ஜெனரல் கோயரிங்குக்கு இந்தியாவைப் பற்றிய ராஜீய ஞானம் எவ்வளவு சூன்யமாக இருக்கிற தென்பதைக் காட்டி விட்டது. ஆனால் வேணுமென்றே குறும்பாக இந்தியருக்கு விரோதமாக ஏதாவது பேசி பிரிட்டிஷாரைக் காக்கை பிடிப்பதற்கு ஜர்மனியின் நாஜிகள் முயற்சி செய்து வருகின்றனர். சில தினங்களுக்கு முன் இந்தியாவின் சுதந்திர ஆசையைத் தூஷித்து ஹிட்லர்கூடச் சில வார்த்தைகள் சொன்னதுண்டு. ஜர்மனியின் க்ஷேமலாபங்களைப்பற்றி ஹிட்லரோ கோரியங்கோ பேசிக் கொள்ளட்டும். இஷ்டப்பட்டால் பிரிட்டனிடம் எண்ணான்கு முப்பத்திரண்டு பற்களையும் இளித்துக் காட்டட்டும். இந்தியாவைப் பற்றி இடக்காகவும் தவறுதலாகவும் பேசுவதற்கு இவர்கள் யாரென்று கேட்கின்றோம். ஆனால் கோயரிங்மீது அதிகம் கோபிப்பதற்கில்லை. ஏனெனில் பத்து வருஷங்களுக்கு முன்னே சித்தப் பிரமையினால் சிலகாலம் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வாசம் செய்த கோயரிங்தானே இவர். இன்றைக்கு நாஜி இயக்கத் தலைவனாகி விட்டானாலும் பழைய மூளைக் கோளாறு அவ்வப்போது தோன்றினாலும் தோன்றலாமல்லவா?

"தேங்காய் அழுகிவிடும்"

"பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னே தேங்காயின் விலை மிக்க உயர்வாக இருந்தபடியினால் அநேக ஏகரா நிலம் தென்னம்பிள்ளை வைப்பதற்கு உபயோகிக்கப் பட்டது. கொப்பரை, கயிறு, பாய், எண்ணெய் முதலிய அநேக கைத்தொழில்களும் அதன் காரணமாக விருத்தியடையத் தொடங்கின. ஆனால் சமீபகாலத்தில் ஏற்பட்ட விலை மந்தத்தினால் தென்னந் தோப்பை உடையவர்கள் மிகவும் சஞ்சலத்திற்குள்ளாகி யிருக்கின்றனர். ஒரே வார்த்தை. தேங்காய் வர்த்தகம் செத்துப் போச்சு! என்றே சொல்லலாம்" என்று நியாபதி கிருஷ்ணராவ் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி யிருக்கின்றார். நமது தேங்காய் வியாயாரம் படுத்துப் போனதற்கு முக்கிய காரணம் ஸிலோன் காரர்களின் போட்டியே யாகும். இறக்குமதி வரியைக் கணக்குப்படி நிர்ணயிக்காத காரணத்தினால் ஸிலோன் தேங்காய்களும் தென்னஞ் சரக்குகளும் மிகமிகக் குறைந்த விலைக்குக் கொண்டுவந்து கொட்டப் படுகின்றன.

இறக்குமதி விவரம்.

	கொப்பரை அந்தர்கள்.	தேங்கா யெண்ணை அந்தர்கள்.	தேங்காய்கள் தொகை.
1930	1361	73759	19438
1931	22000	188947	47459
1932	292508	511252	70லட்.
1933	486000	358000	37லட்.

இப்படி ஸிலோனிலிருந்து இறக்குமதி யதிகரித்துக் கொண்டு வந்தால் இந்தியத் தேங்காய் வியாபாரம் உருப்படுவதெப்படியோ? இறக்குமதியாகும் தேங்காய்க்கும், தென்னஞ் சரக்குகளுக்கும் வரி விகிதத்தை அதிகரித்தால் தான் இந்திய விவசாயிக்கு மூச்சு விடுவதற்காவது இடமேற்படும். இல்லாவிடில், "தேங்காயழுகிவிடும்; திருவிளக்கு அணைந்துவிடும்."

மூளை நோய்!

அஹமதாபாத் நகரில் இப்போது ஒரு ஒட்டுவா ரொட்டி வெகு மும்முரமாக இருக்கிறதாம். அந்த நோய் கண்டவர்களில் பாதிப்பேர் 'அவுட்டாகி' விட்டனர். சென்ற ஞாயிறன்று அஹமதாபாத் ஆஸ்பத்திரியில் 65 பேர், சாவுக்கும் வாழ்வுக்கு மிடையே மன்றாடிக் கொண்டு கிடந்தனர். இந்த நோய் ஒரு வகை மூளைநோய். Meningitis என்று டாக்டர் இதற்குப் பெயர் சொல்வர். மூளை வீங்கிவிடுவதும், மூளையில் உற்பத்தியாகிக் கசியும் நீர் அங்கேயே தேங்கிவிடுவதும், அதன் பயனாகப் பித்தம் அதிகரித்து ஆள் பிதற்றத் தொடங்குவதும் இந்த வியாதியின் சேஷ்டைகள். இது நகரத்தில் பரவாதிருப்பதற்காக அஹமதாபாத் முனிஸிபாலிட்டி ஏதோதோ ஏற்பாடுகள் செய்துவருகிறது. ஸினிமாக்கள் தடுக்கப்பட்டு விட்டன. எங்கேயும் கூட்டங்கள் கூடலாகாதென்றும், விருந்துகள்கூட நடத்தலாகாதென்றும் உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன. இப்போது அகமதாபாத்தில் இந்த ஒட்டுவா ரொட்டியான மூளைநோய் செய்யும் அட்டகாசம் பிரமாதமா யிருக்கிறதாம்.

அந்த மாமரத்தின் வம்சம்

எரவாடாச் சிறையில் மகாத்மாஜி உண்ணாத் தவமிருந்தபோது ஒரு மாமரத்தடியில் இருந்தா ரல்லவா? அந்த மாமரத்தின் வித்தொன்றைச் செடியாக்கி, சரோஜினி தேவி பக்தி சிரத்தையோடு வளர்த்து வந்தாள். மகாத்மாஜி ஹைதராபாத்துக்குப் போனபோது ஸரோஜினி தேவியின் வேண்டுகோளுக் கிணங்க, அவர்கள் வீட்டில் அந்தச் செடியை நட்டாராம். மகாத்மாவின் தவத்தினிடம் ஸரோஜினி தேவிக்கு எவ்வளவு பக்தியிருக்கிறது என்பதை இது காட்டுகிறது.

பீஹாரில் மகாத்மா

தீண்டாமைப் பூகம்பம்

மகாத்மாகாந்தி பீஹார் போய்ச் சேர்ந்தவுடனே, பூகம்பக் கொடுமையால் அவதியுறும் பீஹார் வாசிகளுக்கு ஓர் செய்தி விடுத்தார்.—

"நான் வந்து சேர்ந்ததை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பூகம்பப் பேராபத்து உங்களுக்கு நிகழ்ந்தபோது, நான் வேலூர் கோடியில்தான் இருந்தேன். என்றாலும் எனது ஹிருதயம் உங்களிடமே வந்து விட்டது. தாம் விரும்பியபோது என்னைக் கூப்பிடலாமென்பது ராஜேந்திர பாபுவுக்குத் தெரியும். பூமிதேவியின் பூகம்பக் கொடுமையைவிட, தீண்டாமை என்ற பூகம்பம் அதிகக் கொடுமை வாய்ந்தது என்பதை நீங்கள் நினைவில் வைக்கவேண்டும். இந்த எண்ணம் நம்மைப் பரிசுத்தப் படுத்துவதாக; அதனால் இந்த ஆபத்தைத் தாங்கிக் கொள்ள நமக்குச் சக்தி உண்டாவதாக."

ஹரிஜன வேலை நிறுத்தம்

பாட்னாவுக்குப் போகும் வழியில் அலகபாத்தில் பண்டித மோதிலால் நேருவின் மனைவியைப் பார்ப்பதற்காக மகாத்மா தங்கினார். அங்கு ஒரு பத்திரிகை நிருபர் பேட்டிகண்டு பேசிய போது மகாத்மா கூறிய பதில்களின் சாராம்சமாவது:—"நான் எவ்வளவு காலம் பீஹாரில் இருப்பேன் என்பது எனக்குத் தெரியாது. அதெல்லாம் ராஜேந்திர பாபுவின் முடிவைப் பொறுத்தது. எனது பீஹார் வேலை, ஹரிஜனவேலைக்குத் தடையாய்த்தானிருக்கும். ஆனால், பீஹாரிலிருந்து விடுதலையடைந்த உடனே மறுபடியும் ஹரிஜனவேலையை ஆரம்பித்து விடுவேன். ஹரிஜன நிதிக்குத் திரட்டிய பணத்தை, பீகார்ப் பூகம்பத்தால் கஷ்டப்படும் ஹரிஜனங்களுக்குச் செலவழிக்கவேண்டி யிருக்குமானால், அவ்வாறே செய்வோம்."

காந்திஜீயின் தீர்மானம்

காந்திஜீ பீஹாருக்கு விஜயம் செய்ததால், அங்கு பூகம்பக் கஷ்ட நிவாரண வேலை மும்முர மடைந்திருக்கிறது. பூகம்பக்கஷ்ட நிவாரணத்திற்காக ஏற்பட்டிருக்கும் மத்தியக் கமிட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை கூடப்போகிறது. அதில் மகாத்மா சில தீர்மானங்களைப் பிரேரணை செய்யப் போகிறார். அந்தத் தீர்மானங்களின் ரூபத்தில் மகாத்மா சில திட்டங்களை வகுத்துத் தருவார். பூகம்ப நிதியை எப்படி விநியோகிப்பது என்ற விவரம் அந்தத் திட்டத்தில் அடங்கியிருக்கும். (1) குடிசைகள் கட்டுவது, (2) இடிந்த கிணறுகளைப் பழுது பார்ப்பது, (3) பாழான நிலங்களைச் சீர்திருத்துவது, (4) கஷ்டப்படுபவர்களுக்குப் பண உதவி செய்வது முதலிய ஏற்பாடுகள் அத் திட்டத்தில் காணப்படும்.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

யாத்திரா மார்க்கம்

பெண்களின் பொறுப்பு

ஹைதராபாத்தில் மகாத்மாஜீ பெண்களுக்குச் செய்த ஓர் பிரசங்கத்தில் கூறியதாவது:—

"குடித்தனத்தை நிர்வகிப்பவர்கள் பெண்கள்தான். ஆகையால், சீர்திருத்தமும் நல்லவேலையும் உங்களால்தான் பெரும்பாலும் நடத்தமுடியும் என்பது எனது நம்பிக்கை. பெண்களின் இயல்பே பொறுமைதான். புருஷர்களை விட அதிகக் கஷ்டங்களைப் பெண்கள்தான் சகித்துக்கொள்ளுவார்கள். ஆகையால் அவர்கள் எந்த வேலையை மேற்போட்டுக் கொண்டாலும் வெற்றி காண்பது நிச்சயம். நமது மதத்தையே சேர்ந்த ஒரு வகுப்பாரை ஒதுக்கித் தள்ளுவது அநீதியாகும். அந்த நமது ஜனங்களுக்குச் சேவைபுரிவதற்காக, இங்கே மிகப் பெரிய ஒரு கூட்டம் கூடியிருப்பதைக் காண நான் சந்தோஷ மடைகிறேன்."

ஐந்து விரல் போல

ஹைதராபாத்தில் இன்னோர் கூட்டத்தில் மகாத்மா பேசியபொழுது, கூறியதன் சாராம்சமாவது:—

"ஹரிஜன விஷயத்தைக் குறித்து 50 வருஷங்களாக யோசித்து வருகிறேன். ஹரிஜனங்களுக்கும் இதர வகுப்பாருக்கும் வித்யாசங்களிருக்கக் கூடாதென்று எனக்கு நிச்சயமேற்பட்டுளது. ஹிந்து, முஸ்லீம், கிறிஸ்தவர், பார்ஸி முதலியவர்களுக்குள்ளும் வேற்றுமைகளிருக்கக் கூடாதுதான். எல்லாரும் கையிலுள்ள ஐந்து விரல்களையும் போல ஒற்றுமையாய் வாழவேண்டும். தீண்டாமை ஒழிப்பதில் ஹிந்துக்களுக்கு விசேஷக் கடமை யிருக்கிறது. அமெரிக்கா, ஜப்பான், முதலிய நாடுகளிலுள்ள நண்பர்களிடமிருந்து எனக்குக் கடிதங்கள் வந்திருக்கின்றன. 'எங்கள் நாட்டில் தீண்டாமை என்ற சங்கதியே கிடையாது' என்று அக்கடிதங்களெல்லாம் சொல்லுகின்றன. சனாதன ஹிந்துக்கள் உள்பட எல்லாருமே ஹரிஜனங்களை உயர்த்தும் வேலையில் ஈடுபடவேண்டும் என்பதே எனது வேண்டுகோள்."

கதரை அணியுங்கள்

கோயிலும் ஹரிஜன நிதியும்

(மகாத்மா காந்தி)

ஆலயப்பிரவேசத்தைக் குறைகூறும் அபிப்பிராயங்கள் பத்திரிகைகளில் சில சமயம் காணப்படுகின்றன. "எங்களுக்குக் கோயில் வேண்டாம். பொருளாதார முன்னேற்றத்துக்கே நீங்கள் சேர்க்கும் பணத்தையெல்லாம் உபயோகியுங்கள்" என்று ஹரிஜனங்கள் சொல்லுகிறார்கள். "கோயில்பிரவேச விஷயத்தை அடியோடு விட்டுவிடுங்கள்" என்று சில சனாதனிகள் கூறுகிறார்கள். இரண்டு அபிப்பிராயங்களும் தவறானவை. ஹரிஜன நிதியிலிருந்து ஒரே ஒரு தம்படியைக்கூடக் கோயில் கட்டுவதற்கு உபயோகிக்கப் போவதில்லை. பொதுக் கோயில்களையே, இதர ஹிந்துக்களுக்குச் சமானமாக ஹரிஜனங்களும் பிரவேசிக்கும்படி திறந்துவிட முயற்சி செய்யப்படுகிறது. கோயில்களில் நுழைவதா வேண்டாமா என்பது ஹரிஜனங்களின் இஷ்டத்தைப் பொறுத்ததாகவே யிருக்கும். சவர்ண ஹிந்துக்கள் மட்டில், தாங்கள் வைத்திருக்கும் தடையை நீக்கிவிட வேண்டும்.

ஹரிஜன்த் தலைவர்கள் என்ன அபிப்பிராயம் சொன்னாலும் சரிதான்; ஹரிஜனங்கள் பொதுவாக, கோயில் பிரவேசத்தில் ஆவலுடையவர்களாகவே யிருக்கிறார்கள். கோயில்கள் திறக்கப்பட்ட விடங்களில், கோயிலுக்கு வரும் இதர ஜனங்களுடைய பூரண சம்மதத்தின்பேரிலும், பெருங் கூட்டங்களுக்கு முன்னிலையிலுமே திறக்கப்பட்டன. ஓர் மூலை முடுக்கிலே ஏதோ ரகசியமாய் ஒரு கோயிலைத் திறப்பதால், ஹிந்து மதத்துக்கு எவ்வித நன்மையும் ஏற்பட்டுவிடாது. உண்மையிலேயே ஆத்மார்த்தமான பயன் ஏதாவது உண்டாக வேண்டுமானால், பகிரங்கமாகவே, பக்தி சிரத்தையுடனேயே திறக்கவேண்டும்; இப்பொழுது கோயிலுக்குச் சென்று தொழும் ஜனங்களிற் பெரும்பாலோரின் மனப் பூர்வமான சம்மதத்தைப் பெற்றே திறக்கவேண்டும். கோயில்களில் நம்பிக்கையோ சிரத்தையோ இல்லாமல், ஆலய வணக்கம் ஓர் மூட வழக்கம் என்றுகூட நினைத்துக் கொண்டு, சீர்திருத்தக் காரர்களென்று தாங்களாகச் சொல்லிக் கொண்டு திரியும் மனிதர்களாகச் சேர்ந்து கோயிலைத் திறக்கக் கூடாது.

கோயில் பிரவேசக் கிளர்ச்சிக்குப் பணம் போட வேண்டியதில்லை. கோயில்களில் நம்பிக்கை யுடைய சில ஊழியர் வேண்டும். அவர்கள் இல்லாமல் இந்த வேலையை நடத்த முடியாது. சவர்ண ஹிந்து மகா ஜனங்களிடம் இவர்கள் வார்த்தைக்குத்தான் மதிப்பு இருக்கும். ஆகையால், கோயில் பிரவேச அலுவலை நயமாகவும், ஜாக்கிரதையாகவும் ஆற்றவேண்டும். கோயில்களில் நம்பிக்கையுடைய சீர்திருத்தக்காரன், கோயில் பிரவேசக் கிளர்ச்சி செய்யவும் அது இல்லாமல் சீர்திருத்தம் சாத்தியமல்ல என்று விளக்கிச் சொல்லவும் வேண்டும். இவை அவன் உரிமையும், கடமையுமாகும். ஏனென்றால், கோயில் பிரவேசமில்லாமல், தீண்டாமை அடியோடு அழிக்கப்பட்டது என்று சொல்ல முடியாது.

கோயில் பிரவேசத்துக்கு எதிரிடையாகப் பொருளாதார முன்னேற்றத்தைச் சொல்லுவது முற்றிலும் தவறாகும். பொருளாதார முன்னேற்றத்துக்கு, கோயில் பிரவேசம் உதவியே புரியும். ஹரிஜனங்களைத் தாராளமாய்க் கோயில்களுக்குள் விடும்பொழுது, அவர்களது பொருளாதார முன்னேற்றத்துக்கு வேண்டிய சகல துறைகளும் தாமாகவே திறந்துவிடும். வசூலிக்கப்படும் நிதி பூராவும், ஹரிஜனங்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கே உபயோகிக்கப்படும். கல்வி வசதியும் பொருளாதார முன்னேற்றமே யாகும். ஏனெனில், வாழ்க்கைப் பந்தயத்திலே ஓடுவதற்கு அவர்களை அதிகத் தகுதியுடையவர் ஆக்கக் கூடியது கல்வியேயன்றோ. சவர்ண ஹிந்துக்கள் கல்வி பெற்றதால் வாழ்க்கைப் பந்தயத்துக்குத் தகுதியற்றவராகி விட்டதை நான் அறிவேன். வேலையிலே வெறுப்புண்டாக்கிய கல்விதான் அதன் காரணம். ஹரிஜன இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தற்பொழுது கல்வியி லிருந்துவரும் தீமைகள் இல்லாமல் ஹரிஜங்களின் கல்வி முறையைப் பரிசுத்தமாய் வைத்துக் கொண்டால், இந்த ஆபத்து நிகழாது. —"ஹரிஜன்."

விலை அணா இரண்டே! முந்துங்கள்!!

ஸ்ரீமான் S. G. கிட்டப்பாவின் சரித்திரம்

காலஞ்சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீமான் கிட்டப்பாவின் சரித்திரம் வெளிவந்துவிட்டது. 53 பக்கங்களும் 5 அழகிய படங்களையும் உடையது. ஸ்ரீ கிட்டப்பாவினிடம் நெருங்கிப் பழகிய தேசபக்தர் ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியால் எழுதப் பெற்றது.

சங்கு ஏஜண்டுகளுக்கு வியாபாரத்திற்காக ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். மாதிரிக் காப்பிக்கு 3 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விலாசம்:—

ஆக்கூர், அனந்தாச்சாரி,
ஆரிமுத்து ஆசாரி மேஸ்திரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

BOOKS OF THE HOUR

	Rs.	A
By Mahatma Gandhi		
Satyagraha in South Africa ...	4	8
Young India—I (1919-22) ...	4	0
Young India—II (1924-26) ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8
By C. Rajagopalachar		
Chats Behind Bars ...	0	6
By Romain Rolland		
Mahatma Gandhi—a study ...	0	8
By Mahadev Desai		
Gandhiji in Indian Villages ...	2	0
Gandhiji in Ceylon ...	1	4
By Rajendra Prasad		
Candhiji in Champaran ...	2	8
By Krishna Das		
Seven Months with Mahatma Gandhi ...	3	8
By Richard B. Gregg		
Economics of Khaddar ...	1	0
Gandhiji's Satyagraha (2 Vols.)	2	8
Gandhism & Socialism ...	0	2

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

18712

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.
Advertisement rates per Page	Rs. 40 0 0
" Half Page	Rs. 20 0 0
" Quarter Page	Rs. 10 0 0
" per column inch	Rs. 1 8 0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.

4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு			ரூ. 40 0 0
அரைப் பக்கத்திற்கு	"	"	ரூ. 20 0 0
கால் பக்கத்திற்கு	"	"	ரூ. 10 0 0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு	"	"	ரூ. 1 8 0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.

4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu Press"

Invites enquiries of all classes of
General & Commercial Printing.

Printers of

"Harijan"

Conducted by Mahatma Gandhi

and

Published under the auspices of
The Servants of Untouchables' Society

Subscription for "Harijan"

Inland Rs. 4 Foreign Rs. 5-8.

8-c, PYCROFTS ROAD, TRIPLICANE, MADRAS.

Edited, Printed and Published by S. Subramanian at the Swathanthara Sangu Press, Triplicane, Madras.